POEMS OF PILGRIM ECHOES

BENJAMIN H. BARTON

# கவிதை தொகுப்பு

யாத்ரீகனின் எதிரொலிகள்
புத்தகத்திலிருந்து...



சகோ. பெஞ்சமின் ஹைச். பார்டன்

# கவிதை
# தொகுப்பு

*சகோ. பெஞ்சமின் ஹெச். பார்டன்*

*அவர்களின்*

*யாத்ரீகனின் எதிரொலிகள் புத்தகத்திலிருந்து...*

**Published by:**

**www.foodfornewcreature.com**

# பொருளடக்கம்


1. நாம் முன்னோக்கிச் செல்வோமாக

2. ஆசரிப்புக் கூடாரம்

3. அவர் தன்னுடையவர்களை விசாரிக்கிறவர்

4. தேவனுடைய சுரமண்டலம்

5. தேவ வார்த்தை கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது அல்ல

6. எனது பலி

7. பிரகாசமான ஒளி

8. தெய்வீக நெசவு

9. தேவன் கட்டும் ஆலயம்

10. கிதியோனின் சேனை

11. கிறிஸ்துவே, அனைத்துமானவர்

12. சுவிசேஷ சத்தியத்தின் முன்னேற்றம்

13. இருதயத்தை காத்துக்கொள்ளுதல்

14. தேவ கோபாக்கினை

15. ஞானஸ்நான கீதம்

16. உள்ளிருக்கும் கிறிஸ்து

17. மூன்று பொன் வாயிற்கதவுகள்

18. இத்தனை ஆண்டுகளாய்

19. குறுக்கும் நெடுக்கமாக

20. மனதை திடப்படுத்து

21. நாம் புரிந்து கொண்டால் மட்டுமே

22. நீ வாசித்திருக்கிறது என்ன?
23. கர்த்தரின் இரகசியங்கள்
24. அன்பின் இரசவாதம்
25. பரிபூரண திருப்தி
26. இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே
27. ஆண்டவரே இதோ நான் என்னைப் படைக்கிறேன்
28. முயற்சி செய்யத் தகுதி வாய்ந்த காரியங்கள்
29. உங்கள் வாழ்க்கை ஒரு வேதாகமமாக இருக்கட்டும்
30. எல்லாத் துதியும் அவருக்கே உரியது
31. இங்கொருவர் அங்கொருவர்
32. இன்றைக்கு மட்டும்
33. கர்த்தாவே! என்னை நியாயம் விசாரியும்
34. வெற்றி
35. கண்ணுக்குப் புலப்படாத பந்தத்தால் கட்டுண்டிருத்தல்
36. சுகந்த வாசனையின் பிரவாகம்
37. என் ஜெபம்
38. நமது அபூரணங்கள்
39. நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்
40. பரலோகத்தின் முன் அறை
41. இரக்கம்
42. அவர் அறிவார் நானும் அறிவேன்

# 1.நாம் முன்னோக்கிச் செல்வோமாக!

தீவிர அவசரமுள்ள மனிதரைப் போல,
வீணானவைகளைத் தன்னோடு சுமந்து கொண்டுள்ள பயணிகள் போல
உலகின் பரந்த கதவின் வழியே, நாம் கடந்து செல்கிறோம்,
அதன் எல்லா நிலைமைகளுக்கும் முதுகைத் திருப்பி;
ஜீவனுக்கும், ஆனந்தத்திற்கும், தேவனுக்கும் நேராக வழி காட்டும்
அந்த இடுக்கமான பாதையில் நாம் முன்னேறிச் செல்கிறோம்.

நம்மால் முடியாது, நம்மால் அதைத் தாங்கவும் முடியாது
வழிநெடுக வரும் கண்ணிகளுக்கு நாம் அஞ்சுகிறோம்,
நம் மீது உள்ள பாரத்தையும், பாவத்தையும் ஒதுக்கித் தள்ளுகிறோம்,
வெற்றியைப் பெறுவதற்கு உறுதியாக இருக்கிறோம்;
ஆபத்தை நாம் அறிவோம், ஆனால் நமது கண்கள் வெகுமதியின்
மகத்துவத்தின் மீதே நிலைத்திருக்கிறது.

கிறிஸ்தவப் பிரயாசங்களில் இருந்து நமது சரீரங்களைப்
பாதுகாத்துக்கொள்ள,
இப்போது வெறுமையாய் நேரத்தை வீணடிப்பதில்லை,
வீணான தூக்கம் இல்லை;
தீவிரமாகப் போராடுவதில் நமக்குப் பயமில்லை,
இசைந்துபோகவோ, தப்பிச்செல்லவோ எண்ணவில்லை தற்காலத்தின்
ஆதாயத்தை அல்லது சௌகரியத்தின் மீது விருப்பம் இல்லை;
எந்த மனுஷனையோ, சுயத்தையோ திருப்திப்படுத்த நாடவில்லை.

புகழை இழப்பதில் எவ்வித வருத்தமும் இல்லை;
நம்மீது சாட்டப்படும் அவதூறுகளுக்காய்ப் பயப்படவில்லை;
உலகின் கொடிய நிந்தையைக் குறித்து எவ்வித அச்சமும் இல்லை;
மீண்டும் வரப்போகும் இகழ்ச்சியான பேச்சுகளைக் குறித்து
வருத்தமும் இல்லை;
எவரது வெறுப்பும் எங்களது வெறுப்பைத் தூண்டி விடாது,
மாறாக  விரோதத்திற்குப் பதில் அன்பையே தூண்டும்.

சிரிப்புக்குப் பின்னால் எந்த சோகப் பெருமூச்சும் இல்லை,
அல்லது காற்றில் மகிழ்ச்சி சிதறிப்போகவுமில்லை,
சோதோமின் சமவெளியைத் திரும்பிப் பார்ப்பதும் இல்லை;
பாபேலின் அழுத்தங்களுக்கு இனியும் செவி சாய்ப்பதும் இல்லை;
எகிப்தின் பாட்டுக்காகவும்  சிரிப்புக்காகவும் கண்ணீர் சிந்தவில்லை;
ஓடும் நைல் நதியின் மீது தாகமும் இல்லை;

அகந்தை பின் தொடர்வதுமில்லை
உதிர்ந்து போகும் மாலை நம் நெற்றி மீது இல்லை
சோலையில் மந்தமான சிந்தனைகள் இல்லை
நிராசையாகிப்போன அன்பின் வேதனை இல்லை
துணிவுள்ள இதயத்துடனும் சீரானபார்வையுடனும்
நாம் வெற்றியை நோக்கிப் பயணிக்கிறோம்

சோர்வால் ஒடுக்கப்பட்டால் தான் என்ன,
அது மிக குறைவுதான், அதனால் நாம் ஓய்ந்திருக்கிறோம்.
துடிக்கும் இந்த இதயமும் கொதிப்படையும் மூளையும்
சீக்கிரமே மீண்டும் அமைதி அடைந்து சாந்தப்படும்
நீண்ட இரவை கடந்தாகிவிட்டது, விடியல் அருகில் இருக்கிறது
அது மேகச்சூழலற்ற தெளிவானதொரு காலை.

ஆனாலும் இது மிகவும் கொஞ்சம் தான்,
எங்கள் பரிசுக்காக, எங்கள் கிரீடத்திற்காக, எங்கள் வீட்டிற்காக
நாங்கள் வருகிறோம்;
ஏறக்குறைய இன்னும் கொஞ்ச தூரம் தான்,
நாங்கள் வனாந்திரத்தைக் கடந்துவிட்டோம்,
பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன, ஓய்வு தொடங்கிவிட்டது,
யுத்தம் நடைபெற்றது, வெற்றியை அடைந்தாயிற்று!

**- ஹோரேஷியஸ் போனர்**

# 2.ஆசரிப்புக் கூடாரம்

தேவனுடைய மாபெரும் திட்டமானது மிக விஸ்தாரமானது,
முற்றிலும் நிஜமானது என்று கூடாரமும் கூட தெரியப்படுத்துகிறது;
காண்பிக்கப்பட்டிருக்கும் ஆடுகளும், காளைகளும்
எவ்விதமான பலிகளை நிழலாக வெளிப்படுத்துகின்றன!

பரிசுத்த வார்த்தையைக் குறிக்கும் பிரகாரத்தின் பலி பீடமும்,
வெண்கலத் தொட்டியும்,
அதற்கடுத்த கர்த்தரின்  பரிசுத்த ஸ்தலத்திலுள்ள
பலிபீடமும், மேசையும், குத்துவிளக்கும் மிக பிரம்மாண்டமானவை

ஓ எத்தனை அற்புதமான சிந்தனை! நாம் இங்கே வசிக்கலாம்!
மிகப் புனிதமான ஸ்தலத்திற்கு அருகே நாம் செல்லலாம்;
மகா பரிசுத்தமுள்ள இந்த உன்னதமான காரியங்கள்
நாம் பரத்தில் அடையப்போகும் பரலோக சந்தோஷங்களைச்
சொல்கின்றன.

எனவே இங்கே அறுவடை இன்னும் இருக்கும் சமயத்தில்,
அதோடு, இரவின் பொழுது கீழே இறங்கும் முன்பே,
பயமற்ற சமாதானம் நம்மிடம் உள்ளது,
எனவே சத்தியத்தின் மகிமையான வெளிச்சத்திற்காகத்
தேவனைத் துதியுங்கள்.

**- பி. வால்டர் சார்ஜென்ட்**

# 3.அவர் தன்னுடையவர்களை விசாரிக்கிறவர்

இருளான இரவிலும்,பயங்கள் தாக்கும் போதும்,
நீ நடுநடுங்கித், தனிமையில் இருக்கிறாய்,
தேவனுடைய தூதர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நினைவுபடுத்திக்கொள்,
அவர் தன்னுடையவர்களை விசாரிக்கிறவர்.

அவர் ஒருபோதும் தனது பிள்ளைகளைக் கைவிடமாட்டார்,
அவரது வாக்குத்தத்தங்கள் உண்மையானவை.
எனவே சோதனையில் இருக்கும் போது, இதை நினைத்துக்கொள்,
அவர் உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

"உன் வழிகளில் எல்லாம்," "உன்னை காக்கும் பொறுப்பைத் தமது
தூதர்களிடம் கொடுக்கிறார்" மகிழ்ச்சியோ, துக்கமோ, வலியோ
வேதனையோ எதுவானாலும் அவர்கள் எப்போதும் உன்
பக்கத்திலேயே இருக்கிறார்கள்.

நமது தகப்பனின் பாதுகாப்பைக் குறித்து அறியும் போது
எத்தனை சமாதானம்,
அவர் அறியாமல் நம் தலை மயிர் ஒன்றாகிலும்
விழுவதில்லை-மட்டுமன்றி உனது கூப்பிடுதலுக்கு அவரது
செவிகள் எப்போதுமே திறந்திருக்கிறது.

உன்னைப் பாதுகாக்கும் தூதர்கள் உன்னைச் சுற்றிலும்
இருக்கிறார்கள் அவர்கள் தேவனுடைய சிங்காசனத்தை
அணுகுகிறவர்கள், அவர்கள் தேவனுடைய கட்டளையின் படியே
செயல்படுகிறார்கள்-ஏனென்றால் தேவன் தன்னுடையவர்களை
விசாரிக்கிறவர் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை
எப்போதும் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள்.
எனவே விசுவாசத்தில் நிலைத்திரு, அருமையான தேவப்
பிள்ளையே, அவர் தன்னுடையவர்களை விசாரிக்கிறவர்.

**- பி.ஆலிஸ் எம். ரிப்பர்**

# 4.தேவனுடைய சுரமண்டலம்

‘‘சிறிய நீர்த் துளிகளும்
சிறு மணல் துகள்களும்
மாபெரும் சமுத்திரத்தையும்
எழில்மிகு நிலத்தையும் உருவாக்குகின்றன.

அன்பின் சிறு செயல்களும்
கருணையின் சிறு நடவடிக்கைகளும்
பரத்தில் உள்ளவரது இருதயத்தைப் போல்
நம் இருதயங்களைத் தூய்மையானதாக மாற்றுகின்றன.’’

# 5.தேவ வார்த்தை கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது அல்ல

தேவ வார்த்தை சுதந்திரமானது,
தேவ வார்த்தை வலிமையானது,
தேவ வார்த்தை ஒரு மரத்தைப் போன்றது
இங்கு பாடும் பறவைகள் வாழ்கின்றன,
அல்லது அதன் நீரோட்டம் கெம்பீரமான
ஒரு பரந்த ஆறு போன்றது.
மனிதன் தேவ வார்த்தையைக் கட்டுப்படுத்த முடியாது,
அல்லது அது எங்கு செல்ல வேண்டும் என்பதைக் கூறவும் முடியாது.

சத்தியத்தின் மாபெரும் வல்லமையைக் கட்டுக்குள் அடக்கி வைக்க
மனிதன் வீணாய் முயற்சிக்கிறான்
குருடாக்கப்பட்ட எதிரிகள் அணியணியாய் நின்ற போதோ
தேவன் தனது கரத்தை உயர்த்திய போது
கட்டுக்கட்டான இரும்பும் வலிமை அற்றதாகிப் போனது,
யுக யுகமாய் அதுவே அவர்களின் உரிமையாகவே இருந்தது.
மட்டுமன்றி, அவர் தமது வார்த்தையைப் பேசச் செய்த போது,
சத்தியத்தின் சுதந்திரம் வெளிப்பட்டது.

தேவ வார்த்தை மிக ஆழமானது
அல்லது ஒரு பளிங்கு கிணற்றைப் போன்றது.
அதன் ஓட்டம் வெள்ளப்பெருக்கின் வேகத்தைப் போன்றது
பரிசுத்தவான்களும், இரத்த சாட்சிகளும் மிதிக்கப்பட்டபோது
அதனுடைய சட்டம் பரத்தில் இருந்து வழிகிறது;
சமுத்திரத்தின் வலிமையை மனிதனால் கட்டிப்போட முடியாது,
அல்லது தேவ வார்த்தையைக் கட்டுப்படுத்தவும் முடியாது.

- **வால்டர் சார்ஜென்ட்**

# 6.எனது பலி

ஓ என் தெய்வீக ஆண்டவரே, என் பலியானது உமது பலிபீடத்தின்
மேல் வைக்கப்பட்டிருக்கிறது,
இயேசுவின் நிமித்தம் இந்த வெகுமதியை இன்று ஏற்றுக்கொள்ளும்.
உமது ஆலயத்தை அலங்கரிக்க என்னிடம் ஆபரணங்கள் ஏதுமில்லை,
அல்லது செலுத்துவதற்கு உலக பிரசித்திபெற்ற பலிகளும் ஏதுமில்லை;
ஆனால் என் நடுங்கும் கரங்களில் இங்கே நான் கொண்டுவருகிறேன்,
எனது சுய சித்தம் என்பது –மிகச் சிறியதாகவே தோன்றினாலும்;
நான் இதை அர்ப்பணிக்கும் பொழுது, எனக்குண்டான
அனைத்தையும் எப்படி சமர்ப்பிக்கிறேன் என்பதைக்
கர்த்தாவே, உம்மால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

பேரார்வத்தின் போராட்டங்களையும், மனமகிழ்வான காட்சிகளையும்,
அதில் மறைந்திருக்கும் உமது தீர்க்கமான பார்வையால் பார்க்கமுடியும்.
என்னிடம் இருப்பவைகளும், நானும் அல்லது நான் விரும்பும் யாவும்,
ஆழமான அன்பும், ஆசைமிகு எதிர்பார்ப்புகளும்,
முடிவற்ற ஏக்கங்களுமே.
அது கண்ணீரால் நனைந்து,பெருமூச்சால் மங்கி, அழகின்றிப்போகும்
வரை எனது இறுக்கமான பிடியில் இருந்தது,
இப்போது யாவும் தோற்கடிக்கப்பட்டு உமது பாதபடியில் கிடக்கின்றன,
“உமது சித்தம் செய்யப்படுவதாக” என்ற என் ஜெபம் மேலெழுகிறது!

என் துணிவு குன்றும் முன்னரே,பிதாவே, இவைகளை
என்னிடம் இருந்து எடுத்து;
நான் ஒருபோதும் திரும்பப் பெற விரும்பாத படி,
அவைகளை உமது சொந்த சித்ததோடு ஒன்றிணைத்துவிடும்;
இருதயமும், மனஉறுதியும் உம்மிடம் தோற்றுப்போகும்
போது நான் ஒன்றும் இல்லாமல் போகிறேன்.

உம்மைப் போலவே மாற்றி, உம்மைப் போலவே பரிசுத்தமாக்கி,
உம்முடையதைப் போலாக்கி,
உம்முடைய திவ்ய அன்பினால் என் சித்தத்தை மிகக் கிருபை
உள்ளதாக மாற்றும்
அது என்னுடையது என எனக்குத் தெரியாமல் அல்லது
உணராமல் இருக்கலாம்,
ஆனால், என் சித்தம் உம் சித்தத்தோடு ஒன்றானதை அங்கீகரியும்.

- **அறியப்படாத ஆசிரியர்**

# 7.பிரகாசமான ஒளியே வாழ்க!

சீயோனின் மகிழ்ச்சியான காலையின் பிரகாசமான ஒளியே வாழ்க!
இருளில் அடிபட்டுக்கிடந்த தேசங்களுக்குச் சந்தோஷம் உண்டாகட்டும்!
துயரத்தின், துக்கத்தின் குரல்கள் அமைதி கொள்ளட்டும்!
சீயோன் ஜெயத்துடன் தனது மகிழ்ச்சியான ஆட்சியைத் தொடங்குகிறது.

நீண்ட காலத்திற்கு முன்பே இஸ்ரயேலின் தீர்க்கதரிசிகள்
முன்னறிவித்த
சீயோனின் மகிழ்ச்சியான காலையின் பிரகாசமான ஒளியே வாழ்க!
அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு வரும் கோடி
கணக்கானவர்களே வாழ்க!
புறஜாதிகளே, யூதர்களே இதோ அந்த ஆசீர்வாதமான காட்சி.

பாலைவனத்தைப் பாருங்கள் நறுமண மலர்கள்
பூத்துக் குலுங்குகின்றன;
அதில் எழில் மிகு நீரோடைகள் பொங்கி வழிகின்றன;
மலைச் சிகரங்களிலிருந்து எதிரொலிகள் பலமாக ஒலிக்கின்றன,
வறண்ட நிலத்தில் முளைத்த பயிரின் பசுமைப் பாட்டோடு கலக்கின்றன.

பூமியிலிருந்தும், சமுத்திரத்திலிருந்தும் மரித்தவர்கள்
உயித்தெழுவதைப் பாருங்கள்;
பரத்தில் இருக்கும் யெகோவாவுக்குத் துதி உண்டாவதாக;
போர் ஆயுதங்களும், கலவரங்களும் வீழ்ச்சியடைந்துவிட்டன;
இரட்சிப்பின் ஆரவாரம் வானத்தைப் பிளக்கின்றன.

\- **தாமஸ் ஹாஸ்டிங்ஸ்**

# 8.தெய்வீக நெசவு

மறைஞான நெசவாளரைப் பாருங்கள்,
பரத்தில் அமர்ந்திருக்க – அவரது தறி பூமியில் உள்ளது;
அதை நெம்பும் மிதி பலகைகள் மேலும் கீழுமாக இயங்குகின்றன.
உலகின் இருண்ட யுகத்தை அந்த நெசவு பின்னலுக்காய் எடுத்து,
இராஜாக்களையும் ஞானிகளையும் அதன் குறுக்கு
இழைகளுக்காய் எடுத்து,
பிரபுக்களையும் அவர்களது பிரதிநிதிகளையும் எடுத்து,
எல்லா தேசங்களையும், அவைகளின் ஸ்தானங்களையும்
எடுத்து நெய்கிறார்.
சிம்மாசனங்கள் அவரது நெசவு ஓடகட்டையின் சுழல் உருளைகள்,
அவைகளை இராணுவப்படைகள் சிதறி ஓட விரைவுபடுத்தும்–
நெசவு பின்னல்கள் இழைகளுக்குள் ஓடவேண்டும்;
தேசங்கள் அங்கும் இங்கும் அலைந்து!
அவை நெசவாளரின் சித்தத்தின் படிச் செல்லும்!

அமைதலோடு அந்த மறைஞான நெசவாளரைப் பாருங்கள்
அவரது நெசவு ஓடகட்டையை இங்கும் அங்குமாய் வீசுகிறார்;
இரைச்சல் மற்றும் கடும் குழப்பங்களுக்கு மத்தியில்,
ஒவ்வொரு அசைவும், கொந்தளிப்பும்,
ஒவ்வொரு இசைவும், குழப்பமும்,
மகத்தான முடிவில் எதைக் காட்டும் என்று
அந்த நெசவாளருக்குத் தெரியும் என்று தோன்றுகிறது!

மந்த புத்திக்காரர் நம்ப முடியாத அளவிற்கு!
என்ன மகிமையான அற்புதம்! எத்தனை அருமையான நெசவு!
இப்படியானதை எந்தப் புராண யுகங்களும் அறியாது,
வரலாற்றின் நீண்ட நெடிய அரங்குகளில்,
ஞானிகளின் காலடிகள் எங்கே செல்கின்றன எனும்
அந்த இரகசியத்தை விசுவாசம் மட்டுமே காண முடியும்,

வேலைப்பாடுகள் மிக்க  பிரம்மாண்ட திரைச்சீலை,
நேர்த்தியான கண்களுக்கு எத்தனை அழகாக இருக்கும்!
தூதர்களின் பாதங்கள் படுவதற்கென்றே செய்யப்பட்டது போன்று–
மென்மையாய், மிருதுவாய், பரந்து விரிந்திருக்கும்;
தொட்டுக் கொண்டே இருக்கும் அதன் குஞ்சத்தின் வளைவுகள்;
ஒவ்வொரு வடிவத்திலும் பின்னல் வேலைப்பாடுகளுண்டு,
பிரகாசமான வடிவங்களும், மென்மையான நிறங்களுமாய்,
மையத்தை அலங்கரிக்கும் ஒரு சிலுவையிலிருந்து
ஒவ்வொன்றும் ஒளிர்கிறது – எத்தனை ஆச்சரியமான புதிர்.

இது ஒரு முதுமொழி– அதன் ஒளி முழுவதும் பிரதிபலிக்கப்பட்டதே –
நெய்யப்பட்ட திரைச்சீலையின் கோடுகள்
பரத்தில் இருந்து பிரகாசிக்கும் சூரியனால் கொடுக்கப்பட்டவை என
சிலர் அதை நிராகரிக்கிறார்கள்–
மகா உன்னதமான தேவன் தாமே இதை நெய்கிறார்
விசுவாசிக்கிற யாவராலும் இது நம்பப்படுகிறது–
விசுவாசம் மற்றும் சரித்திரத்தின் வெளிச்சத்தில்
உலகின் அறியப்படாத மர்மங்களை வெளியே கொண்டு வருகிறார்;
அதன் பின்னல்களும் இழைகளும் நலிவடையும் போது,
அந்த பிரம்மாண்டமும், மகிமையுமான முடிவு வருகிறது,
அப்போது, தீர்க்கதரிசிகளும், ஞானிகளும் வெகு காலத்திற்கு முன்
அறிவித்த  அந்த பொற்காலம் ஆரம்பமாகிறது.

– **அறியப்படாத ஆசிரியர்**

# 9.தேவன் கட்டும் ஆலயம்

தேவனுடைய புத்தகத்தில் நிறைந்திருக்கும்
அழகான அனைத்து பாடங்களிலும்,
ஓ! பிதாவின் அதிசயமான பரிவு!
ஓ! மிக தாராளமான அற்புத அன்பு!
சகலத்தையும் உண்டாக்கினவர் என்மேல்
இத்தனை அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை
அறிந்துகொள்ளும்
இந்த ஒரு பாடம், ஆச்சரியமான இனிமையுடன்,
என் உள்ளத்தை அதிகமாகப் பரவசப்படுத்துகிறது!

மோரியா மலையின் சிகரத்தில்,
அந்த ஆலயம் மிகக் கம்பீரமாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது,
அது சுத்தியலின் சத்தமின்றிக் கட்டப்பட்டது,
அந்த உழைப்பாளிகளும் மிக அமைதியாக வேலை செய்தனர்.
அந்த ஆலயத்தின் அடித் தளத்தில் இருந்து கோபுர உச்சிவரை
கற்களை ஒன்றோடொன்று பொருத்தும்
இரைச்சல்களும், சிரமங்களும்,
அதன் மாபெரும் அஸ்திவாரத்திற்கு வெகு தொலைவிலேயே
இருந்தன.

ஒவ்வொன்றையும் அதன் இடத்தில்பொறுத்த
விதவிதமான அளவில் கற்களும்,
மிக உறுதியும் நேர்த்தியுமான தூண்களும்
ஒன்று சேரக் கொண்டு வரப்பட்டன
இதுவரை ஒருபோதும் கண்டிராத அளவு
ஒரு பிரம்மண்டமான ஆலயத்தை அவை உருவாக்கின;
மெய் தான் அதன் அளவுகள் மிகக் கம்பீரமானவை,
அதன் ஒளிரும் பிரகாசத்தில் மிகப் பொலிவோடு இருந்தது.

ஆயினும் இதைவிட மாபெரும் ஆலயம் ஒன்று உண்டு;
அதற்கான திட்டத்தை அமைப்பவர் தேவனே;

கைகளால் கட்டப்படாத அவரது வீட்டிற்கு
அவர் தமது கற்களை இப்பொழுது சேகரித்துக்கொண்டிருக்கிறார்,
நித்திய காலமும் நிலைத்து நிற்கப் போகும்
இந்த மகத்தான ஆலயத்தில்
ஒவ்வொரு ஜீவ கல்லும் என்றென்றும் நிலைத்திருக்கும்படியாய்
அவைகளை நாளுக்கு நாள் அவர் பொருத்திக் கொண்டிருக்கிறார்.

- **அறியப்படாத ஆசிரியர்**

# 10.கிதியோனின் சேனை

“வந்திருக்கும் வாள்களை எனக்காகக் கணக்கிடு.”
“ஆண்டவரே, ஆயிரக்கணக்கோர் தயாராக உள்ளனர்.”
“இதோ பார்! இவை மிக அதிகம், மேலும் இவர்களில்
சிலர் இருக்கிறார்கள்
அவர்கடைய இருதயங்களும், கைகளும் உறுதியாக இல்லை.
எவருடைய ஆத்துமா பற்றியெரியவில்லையோ,
அவன் தனது கூடாரத்தை எடுத்துக் கொண்டு திரும்பிப் போகட்டும்.”

“மீதமுள்ள வாள்களை எனக்காகக் கணக்கிடு.”
“ஆண்டவரே, நூற்றுக்கணக்கானோர் துணிவுடன் நிற்கின்றனர்.”
நான் ஆயத்தம் செய்கிற வெற்றியை அடைய
“இந்த எண்ணிக்கை எனக்கு இன்னும் அதிகமானதே.
மாராவின் தண்ணீரைக் குடிக்கும்படியாக
அவர்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப் போகப்பண்ணு.”

“ஆண்டவரே, இனி எஞ்சியிருப்பவர்கள் வெகு சிலரே,
ஆனால் சத்துருவின் படையோ பயங்கரமாய் இருக்கிறதே,
வெகு சிலரே ஆன எங்களால் என்ன செய்யக் கூடும்?”
“அப்புறத்திலிருந்து என் அழைப்பின் குரலை நீங்கள் கேட்கும் போது,
எக்காளத்தை ஊதித் தீவட்டிகளை உயர்த்திப் பிடியுங்கள்!
மீதியானிய பலவான்கள் உங்கள் கண்கள் முன்பாக
உருகிப்போவார்கள்!”

**- ஜே.எஃப். ஜெலெட்லி**

# 11.கிறிஸ்துவே, அனைத்துமானவர்

கிறிஸ்துவில் சகல பரிபூரணம் வாசம்பண்ணுகிறது: விழுந்து போன மனிதன், ஏழை, பரிதாபகரமானவன், குற்றமுள்ளவனுக்குத் தேவையானது அனைத்தும் அவரிடமிருந்தே புறப்படுகிறது.

பாவத்திற்காய் மனம் வருந்துபவரின், ஆவியில் நொறுங்குண்டவரின், மனவருத்தங்களைச் சீர்படுத்தும் அனைத்தையும் அவரிடம் காண்பார்கள் – வெறுமையின் விரக்தியிலிருந்து காப்பாற்றும் அந்த மன்னிக்கும் அன்பு, எல்லா கவலைகளையும் போக்கும் அந்தத் தாராள கிருபை, வெடிக்கும் பெருமூச்சை ஆறுதல்படுத்தும் அந்த மென்மையான இரக்கம், ஒருபோதும் ஒழியாத மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அந்த சத்தியம், அவரது தயவை நாடி, அவரது பெலத்தின் மீது சார்ந்து, அவரது வார்த்தையைக் கவனிப்போருக்குக் கிடைக்கும் மும்மடங்கு சந்தோசம்.

அவரது புன்னகையைப் பகிர்ந்து, அவரது நாமத்தில் களிகூற, இருதயத்தைத் தேற்றும் அவரது குரலை அவர்கள் தான் அறிந்து கொள்ளவேண்டும்.

தனது வீழ்ந்து போன நிலையில் இருந்து இரக்கத்தால் மீண்டு பரத்தை நோக்கி நடை போடுகிறவர்களுக்கு கிறிஸ்துவே அனைத்துமானவர்: தேவையில் இவர்களது பொக்கிஷம் – துன்பத்தில் இவர்களின் ஆதாரம்– இருளில் இவர்களது விடியல் – சிதைவில் இவர்களின் வலிமை; பகைவரின் மத்தியில் இவர்களது பாதுகாவலர் – தனிமையில் இவர்களின் விருந்தினர்– புயலில் இவர்களின் மறைவிடம் – வருத்தத்தில் இவர்களின் இளைப்பாறுதல் – அடிமைத்தனத்தில் இவர்களது சுதந்திரம் –வேதனையில் இவர்களது விமோச்சனம் – ஜீவனில் இவர்களின் மகிமை – மற்றும்

- **அறியப்படாத ஆசிரியர்**

# 12.சுவிசேஷ சத்தியத்தின் முன்னேற்றம்

சுவிசேஷத்தின் புனிதமான ஏடுகளின் மேல்
யுகங்களின் ஒட்டுமொத்த ஒளிக்கதிர்களும் பிரகாசிக்கின்றன;
ஏனெனில், அது துரிதப்படுத்துவதால், ஒவ்வொரு யுகமும்
அதன் தெய்வீகத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகின்றன.

வல்லமைமிக்க சிறகுகள் கொண்டு, மிகுந்த உயரத்திற்கு
ஆண்டுதோறும் சத்தியம் மேலெழும்பிச் செல்லும்,
அது உயர்ந்து கொண்டே செல்லும் போது, அதனுடைய
ஆசீர்வாதமான ஒளி
இருளை மேலும் மேலும் சிதறடிக்கும்.

நூற்றாண்டுகள் உருண்டோடும் போது, இன்னும் அதிகமான
மகிமை பெருகி,
சத்தியத்தின் அழகிய கொடி விரிக்கப்படும்,
ஒரு துருவம் முதல் மறு துருவம் வரை வல்லமையுடன்
அதன் பிரகாசம் உலகம் முழுவதும் நிரம்பி வழியும்.

மீட்டெடுக்கவே அது வழிந்தோடும், அழிப்பதற்கல்ல;
மேகமில்லா பகல் வெளிச்சம்
அதன் ஒளி மற்றும் மகிழ்ச்சியின் வெள்ளத்தைப் பொழிவது போல்
மங்கிப் பிறழும் மூடுபனியை அது துடைத்தெறிந்து விடும்.

**- சர் ஜான் பௌரிங்**

# 13.இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல்

‘‘உன் இருதயத்தை மிகுந்த கவனத்துடன் காத்துக் கொள்’’
அதில் இருந்து தான் வாழ்க்கையின் பிரச்சனைகள் வருகின்றன,
எனவே அதை எனக்காக நன்றாய் காத்துக்கொள் என்று
ஆண்டவர் உனக்குச் சொல்லுகிறார்.

ஆம், அன்புள்ள ஆண்டவரே, என் இருதயம் உம்முடையது,
என்னிடம் இருப்பதையெல்லாம் குறைவின்றிக் கொடுப்பேன்.
நான் ஜீவிப்பதற்கென்றே உமக்குண்டான அனைத்தையும்
நீர் எனக்காகக் கொடுத்தீரல்லவா?

நான் அடிக்கடி தவறு செய்தாலும்,
நான் நிதானமற்ற வார்த்தைகளைப் பேசினாலும்,
என் இருதயம் இன்னும் நொறுங்குண்டதாகவே இருக்கிறது,
உமது சித்தம் ஒன்றையே நான் நாடுவேன்.

என் நோக்கத்தைத் தூய்மையாக வைத்திருக்க எனக்கு உதவும்,
ஒவ்வொரு தீய எண்ணத்தையும் விலக்கி விடும்,
மேலானவைகள் மீது எனது சிந்தையை வைக்க
உமது வார்த்தையினால் நான் போதிக்கப்படட்டும்.

என் ஆண்டவரின் அடிச்சுவடுகளில் நடக்கவும்,
எப்போதும் என் இருதயத்தைக் காத்துக் கொள்ளவும்,
உமது கிருபை போதுமானது என்று நான் அறிவேன்,
ஆகவே நான் எனது பங்கைச் செய்வேன்.

– **ஆலிஸ் எம். ரிப்பர்**

# 14.தேவ கோபாக்கினை

தேவ கோபாக்கினை என்பது அன்பின் தீவிரம்
பாவத்தைச் சீர்படுத்துவதற்கான– நீதியின் வைராக்கியம்
தவறை மேற்கொள்ளுவதற்கான– தீர்வு
உலகப் பாவ பரிகாரத்திற்கான நீதி.

தேவ கோபாக்கினை பாவத்திற்கான தண்டனை
இது எல்லா மீறுதல்களுக்கும் உரிய அளவிலானது,
துணிகரமான பாவங்களும், லேசான பாவங்களும்
நீதியோடும், நன்றாகவும் வேறுபடுத்திப் பார்க்கப்படும்.

தேவ கோபாக்கினை தேவையற்ற வேதனையை ஏற்படுத்தாது,
பழி தீர்க்கவோ அல்லது அவரை மகிழ்விக்கவோ அல்ல;
ஆனால் இரக்கத்தின் எல்லையை அடையும் குறிக்கோளோடு,
தீமையை வேரறுத்து, நன்மையைப் பெருகச் செய்யும்.

தேவ கோபாக்கினை ஒரு பட்சிக்கும் அக்கினி,
அழிப்பதற்குரிய தீமை இருந்தாலோ அல்லது சுத்திகரிப்பது
நல்லது என்றாலோ
அதை எரித்துவிடும்; இல்லையென்றால் பாவக் கலப்பில் இருந்து
சகலமும் விடுவிக்கப்படும் வரை அது ஓயாது.

தேவ கோபாக்கினை என்பது அன்பான பெற்றோரின் பிரம்பு,
கீழ்ப்படியாதோரை தண்டித்து, அடக்கி,
தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படி வளைத்து,
சகலமும் புதிதாக்கப்படும் போது அந்த அன்பு ஆளுகை செய்யும்.

தேவ கோபாக்கினை வீணாக ஒருபோதும் தாக்காது,
பாவம் முற்றிலும் நீங்கும் வரை;
தேவன் தமது கிருபையுள்ள நோக்கத்தை அடையும் வரை,
பூமிக்கு நீதியையும், சமாதானத்தையும் மீட்டுக் கொடுக்கும்
வரை அதன் தாக்கம் முடிவுக்கு வராது.

– எஃப்.ஜி. வில்சன்

# 15.ஞானஸ்நான கீதம்

ஓ! தேவனுடைய பிரியமுள்ள குமாரனே
எங்கள் நடுவில் இருங்கள் என நாங்கள் ஜெபிக்கிறோம்;
இடுக்கமான பாதையில் நடக்கும் படி,
எங்கள் பாதங்கள் கீழ்ப்படிதல் எனும் காலணிக்குள்
இருக்கின்றன.

கொடுப்பவர் பலனடைகிறார், இழப்பவர் கண்டடைகிறார்;
மரிப்பவரோ உமக்கென்று வாழ்கிறார் –
இந்த பிரமாணத்தை எங்களுக்குப் போதியும். உம்மோடு உமது
பாத்திரத்தில் பானம் பண்ண
எங்கள் சிந்தையை ஆயத்தப்படுத்தும்.

ஒவ்வொரு துளியாக அதன் கசப்பான பானத்தை
உமது பாவமற்ற உதடுகள் சுவைத்தது,
இந்த பாவ நோயிலிருக்கும் உலகை மீட்க,
பாடுகளின் உச்ச கட்டம் பருகப்பட்டது.

யோர்தானின் நதிக்கரையில் உமது பாதங்களையும்,
கல்வாரியில் உமது கரங்களையும் மரணம் முத்தமிட்டது,
அவருடைய சர்வவல்லமையும் நீரே!
உம்முடைய மகிமையான மகத்துவத்தை எங்கள் இருதயம்
ஆராதிக்கும்.

தெரிந்துகொள்ளப்பட்டவராய் இருக்கும் பொருட்டு,
இவ்வுலகத்தில் இருந்து பிரித்தெடுத்து,
ராஜரீக ஆசாரியரும், குமாரரும், உடன் சுதந்திரருமாய்
உம்மோடு இருக்க கர்த்தாவே, உமது மரணத்தில் எங்களை
ஞானஸ்நானம் செய்யும்.

– **ஜே. எச். ஜி**

# 16.உள்ளிருக்கும் கிறிஸ்து

**ஜீவிக்கும் கிறிஸ்து**, அதிசயமான பிறப்பானவர்,
உலகத்தின் கடினமான பாதையில் நடந்தவர்,
பாவக் காரிருளின் ஆழ்ந்த இருள்வழியே
அந்நியமான இடத்தில் தமது பரிசுத்த ஒளியைப் பொழிந்தவர்.

**மரிக்கும் கிறிஸ்து**, இவரது விலையேறப் பெற்ற இரத்தமானது
பரிதாபமான பாவியின் சமாதானத்தைத் தேவனோடு உறுதி செய்கிறது;
பரத்தில் ஆயத்தப்படுத்தியிருக்கும் சந்தோஷத்திற்கு ஒப்பான
முழுமையான அன்பால் ஆத்துமாவை நிரப்புகிறது.

**பரமேறிய கிறிஸ்து** – சகலமும் செய்தாயிற்று
உலகம் மீட்கப்பட்டாயிற்று, ஒரு ஜெயம் பெறப்பட்டது.
தூதரின் சேனையோடு, ஒரு மகிமையான கூட்டமாய்,
இரட்சிப்பின் கீதத்தை நாம் அனைவரும் சந்தோஷத்தோடு பாடுவோம்.

நம் ஆவிக்குத் தேவையான ஒரு **ஜீவிக்கும் கிறிஸ்து**,
நம் ஆத்துமாவைப் போஷிக்க ஒரு **நேசம்மிகு கிறிஸ்து**;
நமக்கென அவரே ஈடுபலியான ஒரு **மரிக்கின்ற கிறிஸ்து**,
நம்மை விடுதலையாக்க ஒரு **உயிர்த்தெழுந்த கிறிஸ்து**.

இதுவும் நமது தேவையே – **உள்ளிருக்கும் ஒரு கிறிஸ்து**,
பாவத்திற்குத் தூரமாய் விலகி, தேவனோடு ஒரு வாழ்க்கை,
முரட்டாட்டமான நம் சித்தத்தை முற்றிலும் கட்டுக்குள் கொண்டு வந்து,
நம் இருதயத்தை நிரப்பும் ஒரு கிறிஸ்துவின் அன்பு.

– **அறியப்படாத ஆசிரியர்**

# 17.மூன்று பொன் வாயிற்கதவுகள்

உன் உதடுகள் உச்சரிக்க விரும்பும் ஒவ்வொரு சிந்தனையும்
மூன்று பொன் வாயிற்கதவுகளையும் கடக்கட்டும்,
ஆனால், இவற்றின் வழியாக கடக்கத் தவறினால்,
அவைகள் சொல்லப்படாமலேயே இருப்பதாக;
ஒவ்வொரு வாயிலின் மீதும் வெள்ளி எழுத்துக்களில்
எழுதப்பட்டிருப்பத்தை நீ காண்பாய்,
முதல் வாயிலின் மீது "அது உண்மையா?"
இரண்டாவதில் "அது இரக்கம் நிறைந்ததா?"
மூன்றாவதில் "அது தேவையா?"
அப்படியானால் உன் சிந்தனைகளைக் காத்துக் கொள்,
ஒன்றையும் தப்பவிடாதே,
இந்த மூன்று வாயிலைக் கடந்து வந்தவைகளையோ
பாதுகாத்துக்கொள்!

- கெர்ட்ரூட் டபிள்யூ. சைபெர்ட்

# 18.இத்தனை ஆண்டுகளாய்

இத்தனை ஆண்டுகளாய்! எத்தனை பாடங்களை அவை வெளிப்படுத்தின,
பாலைவனப் பயணத்தில், பண்டைய இஸ்ரயேலின் தேவனிடத்திலிருந்தே
ஷெக்கினா மகிமையில் கிருபையையும், வழி காட்டுதலையும் பெற்றதைத்
தொடர்ச்சியான என் முறுமுறுப்புக்கிடையில், துயரங்கள், பயங்களிடையில்,
இத்தனை ஆண்டுகளாய்- அவர் எவ்வளவு உண்மையுள்ளவராக இருந்தார்!

உடன்படிக்கையின் தேவனே! துவக்கம் முதல் முடிவு வரையிலும்,
தெளிக்கப்பட்ட கதவிற்குள்ளே நான் நின்றதிலிருந்து,
சங்காரத் தூதன் என் மீறுதலின் மேல் கடந்து சென்ற போது,
உமது உன்னத தூதன் என் முன்னே சென்றார்;
தகுதி இல்லாமலேயே, இலவசமாய், இத்தனை ஆண்டுகளாக
வழிகளில் எல்லாம் தீமை ஏதும் இன்றி நன்மையானவைகளே காணப்பட்டன!

உம்முடைய பிரசன்னம் சமுத்திரத்தில் ஒரு பாதையை ஏற்படுத்தியது;
உம்முடைய பிரசன்னம் கசப்பான நீரை மதுரமாக்கியது;
ஒவ்வொரு நாளும் உமது கரங்கள் இனிய, நேர்த்தியான உணவை
என் காலடியில் கிடைக்கும் படி எனக்காக ஆயத்தப்படுத்தின.
ஆனால் உற்சாகமூட்டும் அந்தக் கிருபையை எடுத்து ருசிக்க வேண்டியதே,
அது இத்தனை ஆண்டுகளாய் புத்துணர்வூட்டிக்கொண்டே இருக்க ஆரம்பித்தது!

நான் தாகமாயிருந்து பூமியின் நீரோடைகள் வற்றியபோதெல்லாம்,
நான் அலைந்து திரிந்து என் நம்பிக்கை தொலைந்தபோதெல்லாம்,
உம் கரம் எனக்கு தூயதான, முழுமையான விநியோகத்தைக் கொண்டு வந்தது,
அதோடு ஒரு அன்பான அழுத்தத்தால் என்னை கவர்ந்து கொண்டது.
அந்த கரம் எனது கண்ணீரை எத்தனை முறை துடைத்தது, மற்றும்
இத்தனை ஆண்டுகளாக ''மன்னிக்கப்பட்டது'' என்று எழுதியது!

உம் அன்பால் நியமிக்கப்பட்ட ஒழுங்குமுறைகள்
என் இருதயத்தில் மிக மென்மையாக விழுந்தன;
தெய்வீக நீதியின் கனிகளைச் சுமக்கும்படி

அதன் முட்புதரைச் சுற்றி என் ஆத்துமா பயிற்றுவிக்கப்பட்டது;
அதன் ஒவ்வொரு தடையில் ஞானமும், அதன் ஒவ்வொரு நகர்வில் அன்பும் இத்தனை வருடங்களாய்த் தொடர்ந்து வெளிப்பட்டது!

ஆண்டவரே, நான் என்னவாக இருந்திருக்கக்கூடும் என்பது என் ஆவிகுத் தெரியும் –
கலகக்காரனாய், முரடனாய், வழித்தப்பி அலையக்கூடியவனாய் இருந்திருப்பேன்;
ஆண்டவரே, மாம்சத்தையும், பகைவரையும் மீறி நான் என்னவாக இருக்கிறேனோ,
அப்படியான பாதையில் என்னை வைத்திருக்கும் கிருபைக்கு நான் கடமை பட்டிருக்கிறேன்.
இதை வருடங்களை நான் திரும்பி பார்க்கும் போது,என் தகுதிகள் யாவும் மறைந்து போகிறது, உமக்கே மகிமை உண்டாவதாக!

என் கடைசி மூச்சுவரை நீர் கையாளும் எல்லாவற்றுக்கும்,
உமக்கே மகிமை உண்டாவதாக! எல்லாத் துதியும் உமக்கே உரியது;
தினமும் உம்மை எபினேசர் என்று புகழ்ந்து,
மரணத்தின் திரையைக் கடந்து “இரட்சிப்பை” பாடுவேன்–
கிரீடமும், பொன் எக்காளமும் இருக்கும் இடத்தில்,
யுகா யுகங்களுக்கு மீண்டும் மீண்டும் உமது அன்பைச் சொல்வேன்!

- **ZWT செப்டம்பர் 15, 1894,**
**பக்கம் 293. R:1703**

# 19.குறுக்கும் நெடுக்குமாக

அன்புள்ள ஆண்டவரே, என்னுடைய சித்தம், உமது சித்தத்தினின்று
அடிக்கடி மாறுபட்ட பாதையில் செல்கிறது;
இருளான நாட்கள் ஒவ்வொன்றிலும்–
“உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக” என்று சொல்வது மிகக் கடினமே!
ஆயினும் உமது சித்தததைச் செய்யவும், உமது வார்த்தைகள்
யாவுக்கும் கீழ்ப்படியவுமே இன்னும்  என் இதயம் ஏங்குகிறது.

சில நேரங்களில் என் சித்தம் மலர்களைச் சேகரிக்கும்;
உமது சித்தமோ அவற்றை என் கரங்களிலேயே கருகச் செய்து விடும்;
என் மனம் வாழ்வின் வெயிலான நேரங்களைச் சென்றடைகிறது;
உமது சித்தமோ நிழலான பாதையின் வழியாய் நடத்துகிறது;
அநேக நாட்கள் நான் புரிந்துகொள்ள முடியாத
பாதைகளில் போய்க் கொண்டிருக்கிறேன்.

ஆயினும், தோல்வியிலும், இழப்பிலும் இந்த சத்தியம்
மேலும் மேலும் பிரகாசிக்கிறது;
உமது சித்தத்திலிருந்து விலகி எதிர் திசையில் ஓடும்
என் சித்தத்தின் விளைவாக
தன் சொந்த சிலுவையை உருவாக்கிவிடுகிறது;
நேர்மையான உமது சித்தமானது
பெருமை, கனவு மற்றும் பயனற்றவைகளின் ஊடாகச் சென்று
செம்மையாகவும், அமைதியாகவும் அவற்றை அகற்றி விடும்.

ஆனால் உம் சித்தத்திற்கு இணையாக
என் சித்தம் தாழ்மையோடு செல்லுமாயின்,
பரத்திலும், இவ்வுலகிலும் உள்ள அனைத்தும் என்னுடையவையாகும்;
என் சித்தம் ஒருவராலும் குறுக்கிடப்படவில்லை;
நீர் என்னில் இருக்கிறீர், நான் உம்மில் இருக்கிறேன்:
உம் சித்தமும் என் சித்தமும் நிறைவேறுகிறது.

– ஐ. இ. பேஜ்

# 20.மனதைத் திடப்படுத்து

நான் மனதைத் திடப்படுத்திக் கொள்ளட்டும்! தற்போதைய காட்சி
விரைவில் ஓய்ந்து விடும்;
இனி மதிய வேளை சூரியனை மேகக் கூட்டம் மறைக்காது.

இப்போது என் கண்களில் வழியும் கண்ணீர் மறக்கப்படும்;
பாவம் மற்றும் துன்பத்தால் மங்கிப் போகாத சந்தோஷங்கள்
என் பங்காகும்.

தொல்லை மிகு வானில் இப்போது வீசும் புயல் கடந்து போகும்;
இறுதியில் ஆவலுடன் ஏங்கிய மேகங்கள் இல்லா காலை
நேரம் உதிக்கும்.

விரைவில் கடைசி நிழலும் கூட முற்றிலும் விலகிவிடும்;
எனவே விழிப்புடன், காத்திருந்து, நான் நம்பிகையுடன் மனதை
திடப்படுத்திக் கொள்ளட்டும்.

– **எச். கிராட்டன் கின்னஸ்**

# 21.நாம் புரிந்து கொண்டால் மட்டுமே

நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள திரைகளை
அகற்ற முடியுமானால்,
திறந்த மனதையும், ஆவியையும் காண முடியுமானால்,
அந்தச் செயல்கள் எதைத் தூண்டுகிறது என்பதை அறிய முடியுமானால்,
பெரும்பாலும் அதை நாம் நலமானதாகவே காணக்கூடும்
நாம் தீர்மானிப்பதை விட அவை தூய்மையானதாக
இருப்பதைக் கண்டறிவோம்
உண்மையில் சரியாகப் புரிந்து கொண்டால் மட்டுமே
நாம் ஒருவரை ஒருவர் இன்னும் அதிகமாய் நேசிக்கக்கூடும்.

நோக்கங்களை வைத்து எல்லாச் செயல்களையும் நம்மால்
மதிப்பீடு செய்ய முடியுமானால்
அதில் உள்ள நன்மை, தீமையைக் காண முடியுமானால்,
நாம் எப்போதும் பாவத்தை வெறுத்தாலும்
சில வேளைகளில் நம்மால் பாவிகளையும் நேசிக்க முடியும்.
நேர்மையைக் குலைப்பதற்காக
கிரியை செய்து கொண்டிருக்கும் சக்திகளை நம்மால்
அறிய முடியுமானால்,
ஒருவருக்கொருவரின் தவறுகளை நாம் இன்னும் அதிகப்
பொறுமையோடும், இரக்கத்தோடும் தீர்மானிக்க முடியும்.

கவலைகளையும், சோதனைகளையும் நாம் அறிந்திருந்தால்,
முயற்சிகளும் வீணானவை என்பதை அறிந்திருந்தால்,
மேலும் அந்தக் கசப்பான ஏமாற்றங்கள் –
லாப, நஷ்டத்தைப் புரிந்துக் கொண்டிருந்தால்
வெளியில் தெரியும் கடினமான முரட்டுத்தன்மை
அப்படியே தான் இருந்திருக்குமோ?
இப்போது நாம் இடறிவிட்ட இடங்களில் உதவியிருப்போமோ?
குற்றம் சாட்டும் இடங்களில் நாம் இரக்கம்
காட்டியிருப்போமோ?

ஆ! நாம் ஒருவரை ஒருவர் கடுமையாக மதிப்பீடு செய்கிறோம்,
வாழ்க்கையின் மறைந்துள்ள சக்திகளை அறியவில்லை;
செயலின் சீர்குலைவு துவக்கத்தில் சிறு அளவிலேயே
இருப்பதை அறிவில்லை.
குற்றங்களைப் பார்ப்பதே குறிக்கோளாகிப் போனதால் அதன் நடுவிலும்
ஒளிந்திருக்கும் நன்மையின் பொன் மணிகளைப் பார்க்க முடியவில்லை,
ஓ! உண்மையில் சரியாகப் புரிந்து கொண்டால் மட்டுமே
நாம் ஒருவரை ஒருவர் இன்னும் அதிகமாய் நேசிக்கக்கூடும்.

\- **அறியப்படாத ஆசிரியர்**

# 22.நீ வாசித்திருக்கிறது என்ன?

வேதத்தை முழுவதும் வாசிப்பது என்பது ஒரு காரியம், அதைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி நடப்பது என்பது வேறொரு காரியம்.

சிலர் அதைப் படித்துக் கற்றுக்கொள்ளும் ஆர்வத்துடன் வாசிக்கின்றனர், ஆனால் அதன் உட்பொருளுக்குக் குறைவான கவனத்தியே செலுத்துகின்றனர்;

சிலர் வாரந்தோறும் அதைத் தங்களின் கடமையாகக் கருதி வாசிக்கின்றனர், ஆனால் வேதத்தில் இருந்து எவ்வித போதனையையும் தேடுவதில்லை;

வேறு சிலரோ எங்கே, எப்படிப் படிக்கிறோம் என்பதைப் பற்றிய கவலை இன்றி; மிகக் குறைவான கவனத்துடனேயே வாசிக்கின்றனர்,

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறியவே சிலர் அதை ஒரு வரலாறாக வாசிக்கின்றனர்,

பிறரிடம் எப்படித் தர்க்கம் செய்வது எனக் காட்டுவதன் மூலம், தங்களுக்குப் புகழ் சேர்க்க சிலர் இதை வாசிக்கின்றனர்;

மேலும் தமது அயலார் வாசிக்கின்றனர் என்பதாலும்; அதை முழுதும் வாசிப்பதற்கு எவ்வளவு காலமாகும் எனப் பார்க்க சிலர் வாசிக்கின்றனர்.

தாவீது எப்படி ஒரு சிங்கத்தையும் கரடியையும் கொன்றார் என்பதைப் போன்ற ஆச்சரியங்கள் அதில் இருப்பதால் சிலர் அதை வாசிக்கின்றனர்.

மற்றவர்களோ அதை அசாதாரண கவனத்துடன் படித்து, அதில் ஏதேனும் முரண்பாடுகளைக் கண்டுபிடிக்கலாம் என எதிர்பார்க்கின்றனர்.

இது தங்களிடம் பேசவில்லை, ஆனால் எருசலேம் மக்களுக்காகவே எழுதப்பட்டதாகக் கருதிச் சிலர் இதை வாசிக்கின்றனர்.

ஒருவர் இதை ஒரு மர்மம் நிறைந்த புத்தகமாக வாசிக்கிறார்
எனவே, அதில் காணும் எதையுமே அவர் நம்பமாட்டார்;

ஒருவர் தந்தையின் கண்ணாடியைத் தலையில் அணிந்து
வாசிக்கிறார், எனவே தந்தை சொன்னது போலவே
காரியங்களைப் பார்க்கிறார்;

சிலர் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட கொள்கையை நிரூபிக்க
வாசிக்கின்றனர், எனவே அவர்கள் படிக்கும்போது மிகச்
சிறிதளவே புரிந்து கொள்கின்றனர்,

ஏனெனில் இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியையும்
மிக முக்கியமான முடிவுக்குப் பொருந்தும் படி வளைத்து
வாசிக்கின்றனர்.

நான் அவ்வப்போது எண்ணுகிறபடி சிலர் இந்தப் புத்தகத்தை
கற்றுக்கொள்வதற்குப் பதிலாக கற்றுக் கொடுப்பதற்காகவே
வாசிக்கின்றனர்;

சிலர் அதனை விரோதத்தின் நிமித்தம் வாசிக்கின்றனர்;

சரியாகப் படிப்போர் மிகக் குறைவு என நான் அச்சப்படுகிறேன்.

நான் காணும் ஒரு காரியத்தை நீங்களுமே காணக்கூடும்,
நீங்கள் எவ்வளவிற்கு அதிகமாய்ப் படிக்கிறீர்களோ,
அவ்வளவிற்கு அது சத்தியம் என்பதைக் காண்பீர்;

ஆனால் இதைப் புரிந்துகொள்ள, திறந்த கண்கள் மிக அவசியம்,
ஜெபமும், தாழ்மையான இருதயமும் பெரும்பாலும் மிகுந்த
விழிப்புடனேயே இருக்கும்;

அகந்தை அல்லது கவனக்குறைவோடு வாசிப்பவர்,
வேறுபட்ட கருத்துக்களுக்கான முழு காரணங்களை மட்டுமே
கண்டுபிடிப்பர், தாழ்மையுடன் ஆழமாக உணர்ந்து படிப்பவரோ
ஆறுதலின், மீட்பின் சந்தோஷத்தைக் காண்பார்.

– **அறியப்படாத ஆசிரியர்**

# 23.கர்த்தரின் இரகசியங்கள்

தமக்குச் சொந்தமானவர்கள் என்று கர்த்தர் அழைப்பவர்கள் மிகவும் விசேஷமானவர்கள், ஏனெனில் உங்களிடம் எந்த இரகசியமும் மறைக்கப்படவில்லை. ஆதிகாலத்தில் தேவன் பிதாக்களிடம் தீர்க்கத்தரிசிகள் மூலமாய்ப் பேசியது போலவே,அவரது மறைபொருட்கள் கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

‘‘தேவ இரகசியங்கள் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது,’’ சிறு பிள்ளைகள் போல் இருப்பவர்களுக்கே இது கிடைக்கும் அவரது ஆவியால் மட்டுமே அவரது மறைபொருட்கள் காண்பிக்கப்படும் – நம் விசுவாசக் கண்களால் நாம் அவற்றைக் காண்கிறோம்.

அவருடைய மறைபொருட்கள் பல யுகங்களாக மறைக்கப்பட்டிருந்தன, ஆனால் இப்போது அவை நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்து நம்மில் வாசமாயிருப்பதால் அந்த மகிமையை நாம் நம்புகிறோம். அதன் இரகசியத்தை உலகம் அறியாதிருக்கிறது.

வரப்போகும் தமது மகிமையான ராஜ்ஜியம் பற்றியதான மிக அற்புதமான திட்டத்தை நமது தேவன் வெளிப்படுத்தியுள்ளார். ‘‘இப்பிரபஞ்சத்தின் பிரபு’’வினால் அநேகர் குருடராக இருக்கும் போது பார்க்கக் கூடியதான நமது கண்கள் எத்தனை ஆசீர்வாதமானவை.

‘‘கண் காணாததும் செவி கேளாததுமான’’– தேவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்கள் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.அந்த பரலோக இராஜ்ஜிய வாழ்வுக்குரிய வாக்குத்தத்தத்தை–அவரது வார்த்தையின் மூலம் விசுவத்தோடு நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

அப்போது நாம் அறியப்படவேண்டிய வண்ணம் நாமும்
ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வோம்,
அனைத்து மறைபொருட்களும் அப்போது வெளியரங்கமாகும்.
இப்போது நமது பாதை குறுகியதும், கடினமாகவும் இருந்தாலும்,
கிறிஸ்துவின் மூலம் நாம் வெற்றியைப் பெறுவோம்.

– **ஆலிஸ் எம். ரிப்பர்**

# 24.அன்பின் இரசவாதம்

அன்பு என்பது ஒருவர் கோப்பையில் இருந்து
மற்றொருவரின் கோப்பையை நிரப்புவது.
அன்பு என்பது கீழே வைப்பதும்
மேலே எடுப்பதுமாக இருக்கும்;
ஒவ்வொரு புதிய நாளும்
கரடு முரடான பாதையைத் தேர்ந்தெடுக்கிறது
இதனால் அடுத்தவரின் பாதம்  இலகுவாக
ஒரு மென்மையான வழியில் செல்லட்டுமே என்பதால்.
அன்பு குருடானது அல்ல, ஆனால் எல்லைக்கு அப்பால் அது
மற்றவரின் கண்கள் வழியாகப் பார்த்து;
“நான் கொடுக்க வேண்டுமோ?” எனக் கேட்பதில்லை மாறாக
“நான் தியாகம் செய்யட்டுமா?” எனக் கேட்கும்
பிற நெஞ்சங்களையும் உதடுகளையும் பாடச் செய்வதற்கென
தனது துக்கத்தை மறைக்கிறது;
பிறர் வாழ்க்கை இலகுவாகப் பறப்பதற்காக
அது சுமையை ஏந்தி நடக்கிறது.
சகோதரனே, உன் ஆன்மாவில் இப்படிப்பட்டதொரு அன்பு
இருக்கிறதா?
நீ உன் இலக்கை அடையும் போது
அது உன் பெயரைப் பரிசுத்தவான் என மாற்றிவிடும்.

– **அறியப்படாத ஆசிரியர்**

# 25.பரிபூரண திருப்தி

அவரது தயவு அத்தனை பிரகாசமாக ஒளிருவதால்
சோகமானது என நான் அழைக்கும் அந்த நாள் எங்கிருக்கும்?
அவரது ஒளிமிகு அன்பின் வார்த்தைகள் இருப்பதால்
நான் சோர்வடையக் கூடிய நேரம் எங்கிருக்கும்?

அவருடைய கிருபையின் அளவைக் காட்டிலும்
விசுவாசத்திற்கான பெரிய சோதனை எங்கிருக்கும்?
இதற்கு ஈடாக அவர் அளிப்பதைக் காட்டிலும்
விலைமதிப்புள்ள பொருளிழப்பு எங்கிருக்கும்?

அவரின் கையை நம்பி நடக்கும் எனக்கு
நான் இடறக் கூடிய கல் எங்கிருக்கும்?
காற்றையே அதட்டும் அவரது வார்த்தை இருக்கும் போது,
என்னை நடுங்கச் செய்யும் பயம் எங்கிருக்கும்?

அவரது பெலன் எனக்கு உதவி செய்யும் போது
மிகப் பாரமான சிலுவை என்பது எங்கிருக்கும்?
அவர் எனக்கான கிரீடத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதால்
பொறாமை கொள்ளத்தக்க கிரீடமுடைய தலை எங்கிருக்கும்?

பரத்தில் இருக்கும் அவரது மாளிகையை போல்
நாம் ஏங்கத்தக்க வீடு எங்கிருக்கும்?
அவரது அன்பின் இடுக்கமான வழியைக் காட்டிலும்
அங்கு போய்ச் சேர பொருத்தமான வழி எங்கிருக்கும்?

# 26.இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே

சோர்வான கால்களோடு நடப்பது, இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
வாழ்க்கையின் புயல்களைச் சந்திப்பது, இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
முள்ளுள்ள பாதையில் நடந்து செல்வது, இன்னும்கொஞ்ச காலம் மட்டுமே,
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, பிறகு பரிபூரணமான நாட்கள் வரும்.

சத்தியத்தை வெளியில் பரப்ப, இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
தேவனுக்காய் சாட்சி சொல்ல, இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
காலம் விரைவாக ஓடுகிறது, இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
உலகின் துக்கமெல்லாம் கடந்துவிடும், இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே.

நம்மால் முடிந்ததைச் செய்வோம், இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,
அப்போது வாக்குத்தத்தத்தின் இளைப்பாறுதல் வரும், இன்னும்
கொஞ்ச காலம் மட்டுமே,
ஓ இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, எப்படிப்பட்டதொரு வார்த்தை இது,
பிறகு பரிபூரண மகிழ்ச்சி வரும், இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே.

இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே,பின்னர் மரணம் விலகி விடும்,
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, பின்னர் வலியும்,
கண்ணீரும் மறைந்து விடும்;
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, பின்னர் பளிங்குக் கடலின் அருகே,
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, அப்போது சாவாமை அளிக்கப்படும்.

இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, உமது இராஜ்ஜியம் வருவதாக!
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, உறைவிடத்திற்காக உமது
ஜனங்கள் ஏங்குகிறார்கள்;
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, அந்தப் பட்டணம் கண்கள் முன்பு
கொண்டு வரப்படும்,
இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே, பூமியின் துயர்மிகு
இரவு முடிவுக்கு வரும்.

**- எச். கிராட்டன் கின்னஸ்**

# 27.ஆண்டவரே இதோ நான் என்னைப் படைக்கிறேன்

ஆண்டவரே இதோ நான் என்னைப் படைக்கிறேன்,
கொடுக்கும் படி என்னிடம் இருப்பது இதுவே,
இது முதல் உமக்காகவே வாழவேண்டும்,
இதுவே என் இருதயத்தின் முழு விருப்பம்;

என்னுடைய சித்தத்தின் படி அல்ல மாறாக உம்முடைய சித்தப்படி,
நஷ்டத்தை, அவமானத்தை அனுபவித்து,
எல்லாவற்றையும் நான் சகிக்க வேண்டி இருந்தாலும்,
உம்முடைய நாமமே மகிமைப்படுவதாக;

இனிமேல் என் ஒவ்வொரு ஆற்றலையும்,
என் கைகள், என் கால்கள், என் உதடுகள், எனக்குரிய அனைத்தையும்,
என் ஆண்டவரே நீர் தெரிந்து கொள்ளும் விதத்தில்,
ஒவ்வொரு நாளும் உமக்காகவே பயன்படுத்துவேன்.

அன்பின் ஆண்டவரே இடைவிடாமல் எனது ஜெபமெல்லாம்
உமது முகத்தைக் காணும் வரை,
விசுவாசத்தில் நான் உம்முடன் நடக்க,
இன்னும் கிருபை பெருகட்டும் என்பதே.

- **கெர்ட்ரூட் டபிள்யூ. சைபெர்ட்**

# 28.முயற்சி செய்யத் தகுதி வாய்ந்த காரியங்கள்

சோர்வடையாத மற்றும் சோர்வை வெற்றி கொள்ள அனுமதிக்காதது **பொறுமையுடன் கூடிய விடாமுயற்சி.**

மற்றொருவர் செய்த உன்னதமான வேலையைத், தானே செய்தது போலவே மகிழும் **பாரபட்சமற்ற தன்மை.**

உங்களைவிடவும், உங்கள் சகோதரரை மன்னிக்க இன்னும் ஏற்ற காரணங்களைக் கூடுதலாகக் கண்டு பிடிக்கும் **ஆவிக்குரிய மனநிலை.**

செய்த தவறை மறைப்பதற்குப் பதிலாக, அதை சரி செய்ய விரும்பும் **நீதி.**

சிறுமைப்படுத்தலோ அல்லது காயப்படுத்தலோ இருந்தாலும், அதற்குப் பின்னால் ஒரு நல் நோக்கைத் தேடும் **கருணை.**

உங்கள் தடுமாற்றங்களும், தோல்விகளும் கூட மனச்சோர்வுக்கு உட்படுத்தாத **உண்மைத்தன்மை.**

உங்கள் எதிரி தோல்வியடையும் போது துக்கமடைந்து, நீங்கள் தாழ்த்தப்படும் போது சந்தோஷப்படும் **தாழ்மை.**

பேச வேண்டியதும், மவுனம் காக்க வேண்டியதும் எப்போது என்று அறிந்திருக்கும் **ஞானம்.**

செய்தது போதும் என்று நிறைவடையாமல், புகழையும் தேடாத, எந்தப் பாராட்டையும் ஊக்குவிக்காத **பேரார்வம்.**

வார்த்தையால் மன்னிப்பது மட்டுமன்றி, அந்த விஷயத்தை மீண்டும் ஒருபோதும் குறிப்பிடாமல், நேர்மையை நிரூபிக்கும் **மன்னிப்பு.**

பிற சகோதரருக்காக உயர்ந்த, கௌரவமான பங்கை விட்டுக் கொடுத்து, அற்பமான மற்றும் விரும்பத்தகாத ஊழியப் பங்கை தனக்கென தேர்ந்தெடுக்கும் **பணிவு.**

சகோதரர்கள் முன்னிலையில் எப்படி நடந்து கொள்கிறோமோ அதேவிதமாய் நம்முடைய இல்லங்களிலும் வாழக் கவனத்துடன் இருக்கும் **கிறிஸ்தவம்.**

# 29.உங்கள் வாழ்க்கை ஒரு வேதாகமமாக இருக்கட்டும்

உங்கள் வாழ்க்கையே ஒரு வேதாகமமாக இருக்கட்டும்,
அதன் ஆதியாகமம் கிறிஸ்துவாக இருக்கட்டும்,,
அதன் யாத்திராகமம் அர்ப்பணிப்பாக இருக்கட்டும்,
அதன் லேவியராகமம் அன்பாக இருக்கட்டும்,
அதன் சங்கீதம் சந்தோஷமாக இருக்கட்டும்,
அதில் ஒரு தானியேலின் தைரியம் இருக்கட்டும்,
அதோடு கூட யோபின் பொறுமை,
அதோடு கூட ஒரு ஏரேமியாவின் வைராக்கியம்,
அதோடு கூட ஒரு யோவானின் அன்பு,
அதோடு கூட இயேசு மிகுதியாக நிரம்பியிருக்கட்டும்.
மேலும் ஆதியாகமத்தை விட வெளிப்படுத்தின விசேஷம்
பிரம்மாண்டமாக இருப்பதை போலவே,
தொடக்கத்தை விட உங்கள் முடிவு மிகப் பிரம்மாண்டமாக
இருக்கட்டும்.

# 30.எல்லாத் துதியும் அவருக்கே உரியது

மகிமையில் அவருடன் ஆளுகை செய்வதற்கும், அந்த மகத்தான
வெகுமதியைப் பெறுவதற்கும், என் ஆண்டவரோடு உடன்-
சுதந்திரவாளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்,
என் எல்லா பலவீனங்களையும் கடந்து  அவர் எனக்காக ஒரு
கிரீடத்தை கோரினாரானால்,
அந்தத் தேர்ந்தெடுப்பு நிச்சயம் தேவ நாமத்திற்குப் பெரும்
மகிமையையே தரும் என்பதை நான் அறிவேன்.

நான் மிகவும் தகுதியுள்ளவனாய் இருந்திருந்தால், மற்றும் என்
இடறல்கள் குறைவாக இருந்திருந்தால்,
மனிதர் தேவனுக்கு மகிமை அளித்தபோது, அவர்கள் என்னுடைய
ஒழுக்கத்தையும் கூடப் புகழ்த்திருப்பார்கள்;
நான் ஒருக்காலும் யுத்தத்தில் தோற்காமல் இருந்திருந்தாலோ,
அல்லது இலக்கைத் தவறவிடாதிருந்தாலோ,
அவர்கள் அவருடைய நற்பண்பைப் பற்றி பேசுவதைப் போலவே,
என்னுடையதையும் குறிப்பிட்டிருப்பார்கள்.

என்னுடைய எண்ணங்களும், வார்த்தைகளும், செயல்களும்
குறைபாடுள்ளதாக இருப்பதால்,
அவரே எல்லா மகிமையையும் அடைவார்-நிச்சயமாக,
அத்தனைக்கும் அவரே தகுதியுடையவர்.
இந்த பலவீனமான சாவுக்குரியது சாவாமையென்னும்
உன்னதத்திற்கு உயர்த்தப்படுவதை அவர்கள் பார்க்கும் போது,
அற்பமானவைகளில் பேரானந்தம் கொள்ளுகிறவர்களான
அவர்கள் எவ்விதமான துதியை அவருக்குச் செலுத்துவார்கள்!

என் இரட்சகர் மீண்டும் பரத்திற்கு ஏறிச் சென்ற போது,
அற்புதமான  மகிமையால் முடி சூட்டப்பட்டார்,  அது அவரது
பிதாவின் அன்பை நிரூபித்தது என்பதை நான் அறிவேன்;
ஆனால் கிறிஸ்துவின் புண்ணியங்களையும் அவரது



பாவமற்ற கிருபையின் வாழ்க்கையையும் சிந்தித்துப் பார்க்கும் பொழுது, அவருக்கு இப்படிப்பட்ட ஸ்தானத்தை யெகோவா தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் இது மிகவும் வித்தியாசமான ஒன்றாக இருக்கிறது, நொறுக்கப்பட்ட மற்றொரு நாணலைவிட நான் அதிகக் கனம் பண்ணப்படவோ ஒரு துளியளவும் புகழ் அளிக்கும் காரணமோ என்னிடம் ஏதுமில்லை;

என் நாட்களை மகிழ்ச்சியால் முடிசூட்டிய மகிமை அனைத்தும் அவருக்கே உரியது.

நீ எனது அனைத்துத் தோல்விகளையும், மிக இழிவான களங்கங்களையும் அறிந்திருந்தால்,
மேலும் அவற்றின் போது என் பிதா காட்டும் அன்பான பொறுமையைப் பார்த்திருந்தால்,
அவர் தம்முடைய மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு திறமையான ஊழியனாக என்னை ஆக்க முடியும் அல்லது ஆக்குவார் என நினைப்பது உங்களை அளவற்ற ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

ஒரு பலவீனமானவனை அவர் ஒரு பலமுள்ள மனிதனாக மாற்றியதால்,

நான் என்னவாக இருக்கிறேனோ அதற்காகவே அவருக்கு அத்தகைய துதி உரியதாக இருக்குமேயாகில்,

அவர் என்னை இன்னும் உயர்த்தி, சீயோன் மலை மேல் தம்முடைய மிகச் சிறந்த ஒன்றால் எனக்கு முடிசூட்டும்போது, அவருடைய மகிமை எப்படிப்பட்டதாக இருக்கும்?

இத்தனை ஆண்டுகளாக முயற்சித்தும் இன்னும் நான் இவ்வளவு அபூரணனாக இருக்கிறேன்,
நன்மதிப்பைப் பெறச் சாதகமாகவோ, மகிழ்ச்சியின் சிலிர்ப்பை ஏற்படுத்தவோ இல்லை;
நானும் தகுதியுள்ளவனாகத் தோன்றுவதோ அவரது கிருபை இருப்பதால் தான்,

எனவே புகழிலும் மகிமையிலும் எனக்கு எந்தப் பங்கும்,
உரிமையும் இல்லை.

எனது குறைகளை மற்றும் தோல்விகளை நான் வெறுக்கிறேன்,
அவற்றுக்காக நாள்தோறும் போராடுகிறேன்,
ஆனால் எனது பலவீனங்களுடன் கூடிய எனது சுயத்திலிருந்து விட்டு
விலக என்னால் முடியவில்லை;
அவர் என்னைப் பயன்படுத்துகிறார் இதைவிட அதிக கிருபை
உள்ளது – என்பது
உண்மை இப்படியாக இருப்பினும், அவர் என்னைப்
பயன்படுத்துகிறார்–அதை கடந்து கிருபை இனியும் உண்டு–
மேலும் பரிதாபத்திற்குரிய எனக்கும் ஒரு இடத்தைக் கொடுத்தவராகிய
அவரது மகிமையைத் தூதர்கள் சொல்வார்கள்.

# 31.இங்கொருவர் அங்கொருவர்

வாழ்க்கை எனும் மாபெரும் நீரோட்டத்தில் நாம் சந்திக்கும்
அநேகரில் இங்கொருவர் அங்கொருவர் மட்டுமே
மேலான காரியங்களைப் பொக்கிஷமாய்க் காக்கின்றனர்;
இங்கொருவர் அங்கொருவரைத் தவிர,
ஒவ்வொரு மனிதனும் தன் சுயத்தையே மிக
இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு,
தனக்காகவே உழைக்கிறான், தனக்காகவே பாடுகிறான்.

இங்கொருவர் அங்கொருவர் இல்லாதிருந்தால்,
இந்த உலகம் பாழான இடமாகிப் போயிருக்கும்– ஆனால்
யாருடைய இருதயம் சுயநலத்தால் நிரப்பப்படவில்லையோ,
யாரிடம் இன்னும் தேவனுக்கான அன்பு மடிந்து
போகவில்லையோ, யாருடைய நன்றி நிறைந்த துதிகள் இன்னும்
ஓய்ந்து போகவில்லையோ; அப்படிப்பட்டவர்கள் இங்கொன்றும்
அங்கொன்றுமாய் இருக்கிறார்கள்.

மேலும் இங்கொருவரை அங்கொருவரைக் கண்டுபிடிப்பது,
கர்த்தரின் ஞானமுள்ள சித்தமாக இருக்கிறது,
இவர்கள் உலகத்தின் லாபங்களைக் குப்பை என்று எண்ணி,
எந்த நஷ்டத்தால் வரும் ஆபத்திலும்,
கிறிஸ்தவனின் சிலுவையை அனுதினமும் சுமப்பவரை,
தேவன் இங்கொருவரும் அங்கொருவருமாய்க் கண்டுபிடிக்கிறார்.

அவர் தேடுவது எண்ணிக்கைகளை அல்ல,
ஆனால் இங்கே ஒருவரையும், அங்கே ஒருவரையும் தான்;
அவர் ஆத்துமாக்களை அல்ல, அழகிய இரத்தினங்களைத்
தேடுகிறார், அவருடைய பாடுகளைப் பகிர்ந்துகொண்டு,
அவர் நிமித்தம் நிந்தைகளைச் சகித்துக்கொள்பவர்கள்;
இங்கொன்றும் அங்கொன்றுமாய், வெகு சிலரே
இருக்கின்றனர்!

ஓ! ஆனால், நம் மனித குலத்தை உயர்த்துவதில் பங்கேற்கவும்,
பாவத்தின் ஒவ்வொரு தடயத்தையும் துடைத்தெறியவும்,
இந்த பூமியை ஒரு பரிபூரணமான இடமாக்கவும்,
எல்லா இடங்களிலுமே மகிமையை நிறுவவும்,
இங்கொன்றும் அங்கொன்றுமாய் இருப்பவர்களுக்கே உரியது
இந்த பிரமாண்டமான பணி!

# 32.இன்றைக்கு மட்டும்

கர்த்தாவே நாளைய தினத்திற்கும், அதன்
தேவைகளுக்கும் நான் ஜெபிப்பதில்லை;

எந்த பாவக் கறையாயினும் இன்றைக்கு மட்டும்
என்னைக் காத்தருளும்.

உழைப்பதிலும், தவறாமல் ஜெபிப்பதிலும் நான்
அதிக அக்கறை காட்டட்டும்;

வார்த்தைகளிலும், செயல்களிலும் நான்
இன்றைக்கு மட்டும் கனிவாக இருக்கட்டும்;

சிந்திக்காமல் நான் எந்த தவறான அல்லது வீணான
வார்த்தையையும் சொல்லாமல்  இருக்கட்டும்;

இன்றைக்கு மட்டும் உமது முத்திரையை என்
வாழ்க்கையில் நீர் பதிப்பீராக.

எனவே, நாளைய தினத்திற்கும், அதன்
தேவைகளுக்கும் நான் ஜெபிப்பதில்லை;

ஆனால், கர்த்தாவே, இன்றைக்கு மட்டும் என்னைக்
காத்து, எனக்கு வழிகாட்டி, என்னை
அரவணைத்துக்கொள்ளும்.

# 33.கர்த்தாவே! என்னை நியாயம் விசாரியும்

பிதாவின் தயவு வேண்டும்; ஓ! ‘‘நன்றாகச் செய்து முடித்தாய்!’’
என்று சொல்லும் அவரது இனிய வார்த்தைகளால்,
என் கால்கள் ஓடிய இந்த அர்ப்பணிப்பின் பாதையை மகுடம்
சூட்ட விரும்புகிறேன். வெகுமதி என்னவாக இருக்கும் என்பதில்
எனக்குப் பெரிய கவலை இல்லை, ஆனால் அவரது
பார்வையின் அங்கீகாரத்துக்காய் விவரிக்க முடியாத
ஆவலோடு நான் ஏங்குகிறேன்.

எனது வழிகளை உலகம் தவறாகப் புரிந்து கொள்வதை அறிந்து
எனக்கு வலிக்கிறது, என் நண்பர்களின் எதிர்ப்புக் குரல்களைப்
பார்த்து நான் இன்னும் அதிகமாக துக்கம் அடைகிறேன்.
ஆகையால், நான் பெறுவது எதுவாக இருந்தாலும் அது
சரியாகவே இருக்கும் என்ற நம்பிக்கையில்.
பிதாவே, உம் ஞானமிகு தீர்ப்பிற்கு எனது முடிவை இப்போது
விட்டு விடுகிறேன்.

உலகப் புகழின் சோதனைகளை நான் எதிர்கொள்ள வேண்டும்
என்றால், அல்லது ஆதாயத்திற்காக வாழ்பவர் பயன்படுத்தும்
அளவை நான் நிரப்ப வேண்டும் என்றால்,
அல்லது எளிமை என்று உலக மனப்பான்மை அழைக்கும்
இலக்கை நான் அடைய வேண்டும் என்றால்;
இந்த அளவுகோல்களால் என்னை அளக்கும் யாவரும்
ஏமாற்றம் அடைவார்கள் என்பதை நான் அறிவேன்.

வெளிப்புறச் செயல்களைப் பார்க்கும் என் கர்த்தருடைய
சீஷர்களுமே, என்னுடைய தேவைகள் எவ்வளவு என்று
பார்க்கும் போது, என்னைத் தவறாகவே மதிப்பிடுவார்கள்.
நான் அவசரப்பட்டு பேசுவதை அவர்கள் கேட்பார்கள்,

என் குற்றங்களையும் பாவங்களையும் பார்ப்பார்கள்–
உம்முள் இருக்கும் கிருபை அவர்களிடம் இல்லாமையால்,
உள்ளத்தின் ஆழத்தைப் பார்க்கும் திறனும் அவர்களுக்கில்லை.

நான் செய்த அந்த செயலின் நோக்கத்தைக் குறித்து எவ்வளவு குறைந்த அறிவைக் கொண்டிருக்கிறார்கள், நான் கருதியது வேறுவிதமானது, அது அவர்களது கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. நான் செய்ய விரும்பும் மிக நல்ல செயல்களை அவர்கள் ஒருபோதும் அறிய மாட்டார்கள். இருதயத்தின் நோக்கம் காண முடியாதது, ஆனால் பலவீனங்களோ வெளியரங்கமாகிறது.

ஆனால் எதைப் பெற்றுக் கொள்வேன் என்று சுயத்தைத் தீர்ப்பு செய்ய முடியாது என் உணர்வுகளும், தோல்விகளுமே என்னை ஏமாற்றக் கூடும். சில நேரங்களில் நான் சரியான அளவை விட என்னை மேலான நீதிமானாய் நினைத்துவிடுவேன்,
அல்லது இலேசான கண்டிப்பு இருக்கவேண்டிய இடத்தில் கடுமையாய்க் குற்றம் சாட்டிவிடவும் கூடும்.

ஆனால் பிதாவே, சுயத்தையும் நண்பரையும் விட அதிகமாய் நான் உம்மை நம்புவேன் நான் எங்கு சரியாக இருக்கிறேன், எங்கு குறைவுபடுகிறேன் என்று அனைத்தையும் தெளிவாக அறிந்திருப்பவர் நீர். இருதயத்தின் சிந்தனையையும், மாம்சம் எங்கு பலவீனப்பட்டது என்பதையும் நீர் அறிவீர்.
என் இருதயத்தின் இரகசிய நோக்கங்களை நீர் தேடிப் பார்க்கிறீர்.

நீர் சரிபடுத்துவத்தைக் கண்டு நான் பயப்படேன், ஏனெனில் அது அன்பின் நிமித்தமே என்பதை அறிவேன் என்னைப் புண்படுத்தவோ, நசித்துவிடவோ அல்ல ஆனால் மேலானவைகளுக்கு என்னைத் தகுதிப்படுத்தவே அவை அனுப்பப்படுகின்றன. நான் சுய ஒழுங்குபடுத்துதலை

முயற்சிக்கிறேன், ஆனால் பலவற்றை நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறேன் – அவசியமான அந்த பாடங்களைச் சிறப்பாக கற்பிக்கத் தகுந்தவர் நீர் ஒருவரே!

எங்கே நான் தவறுகிறேன் எனக் காண்பித்து, எது சரி என்பதையும் காட்டும், பாடங்களை நான் கற்கும்போது, தவறுகளை எதிர்த்துப் போராட எனக்குப் பெலன் தாரும்.
என் இருதயம் பரிசுத்தமான நோக்கங்களைக் கொண்டுள்ளது, அவை என் வாழ்வில் வெளிப்படட்டும்–
இதுவே என்னைச் சுற்றியுள்ளோருக்கு, உமது பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை நிரூபிக்கட்டும்.

# 34.வெற்றி

எந்த உணவிலும், எந்த ஆடையிலும், எந்த காலநிலையிலும், எந்தத் தனிமையிலும், எந்த இடையூறிலும் நீங்கள் திருப்தி அடையும்போது – அதுவே **வெற்றி.**

(நீங்கள் காரணமாக இல்லாத) எந்தவொரு முரண்பாட்டையும், எந்தவொரு தொல்லையையும், எந்தவொரு ஒழுங்கீனத்தையும், எந்தவொரு தாமதத்தையும் நீங்கள் பொறுத்துக்கொள்ளும் போது – அதுவே **வெற்றி.**

நீங்கள் மறக்கப்படும்போது அல்லது புறக்கணிக்கப்படும் போது, அல்லது வேண்டுமென்றே இகழப்படும்போது, நீங்கள் மனதிற்குள் புன்னகைத்து, அந்த அவமானத்தில், கவனக்குறைவில் மகிழும் போது – அதுவே **வெற்றி.**

அறியாமை, வீண் செலவழிப்பு, ஆன்மீக உணர்வின்மை, பாவிகளின் எதிர்மறை நிலைப்பாடு, துன்புறுத்தல் ஆகியவற்றின் முன் நீங்கள் நேருக்கு நேர் நின்று, இயேசு சகித்தது போல அனைத்தையும் சகிக்கும்போது – அதுவே **வெற்றி.**

உங்கள் உரையாடலில் உங்களைப் பற்றி நீங்கள் கூற விரும்பாமல், உங்கள் நல்ல செயல்களைப் பதிவு செய்யவோ, பாராட்டுகளைத் தேடவோ நீங்கள் ஒரு போதும் கவலைப்படாமல், உண்மையாகவே "அறியப்படாமல் இருக்க விரும்பும் போது" – அதுவே **வெற்றி.**

உங்கள் நன்மை, தீமையாகப் பேசப்படும் போது, உங்கள் விருப்பங்கள் குறுக்கிடப்படும் போது, உங்கள் ரசனை புண்படுத்தப்படும் போது, உங்கள் ஆலோசனை புறக்கணிக்கப்படும் போது, உங்கள் கருத்து கேலி செய்யப்படும் போது, அதை எல்லாம் பொறுமையுடன் அன்பான மௌனத்தில் ஏற்கும் போது – அதுவே **வெற்றி.**

# 35.கண்ணுக்குப் புலப்படாத பந்தத்தால் கட்டுண்டிருத்தல்

எங்கள் சொந்த நாட்டைக் கடந்து, தொலைவில் உள்ள கடலுக்கு அப்பால் பணிவோடும், ஏக்கத்துடனும் ஜனங்கள் தங்கள் இருதயத்தை உமக்கு நேராய் உயர்த்துவார்கள்.
ஓ பிதாவே, நாங்கள் எப்படியாய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறோம், எங்கள் கூடாரங்கள் எப்படிச் சரிந்து கிடக்கின்றன, ஆனாலும் எங்கள் இதயபூர்வமான அன்புக்குரியவர்களுடன் சேர்ந்திருக்க நாங்கள் ஏங்குகிறோம்.

ஆனால், பிதாவே, எங்கள் சிதறுண்ட நிலையிலும், நாங்கள் பூமியில் இருக்கும் போதே, எங்கள் இதயங்களை ஒன்றிணைக்கும் அந்த சங்கிலிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்; வெகுதூரம் பரவலாய் சிதறடிக்கப்பட்டிருந்தாலும், மணவாட்டியின் ஒவ்வொரு உறுப்பினரையும் மிக நெருக்கமாயும், மிக அன்பாயும் நேசிக்க அந்த பிணைப்பு சாத்தியப்படுத்துகிறது.

சரீரமானது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடைக்கப்பட்டிருந்தாலும், கிருபையின் பிள்ளையோடு சேர்ந்திருக்க ஆவியானது, சிந்தையில் சுதந்திரமாக இருப்பதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.
சகோதரர் எங்கிருந்தாலுமே அவர்களது ஊழியத்தில் நாங்களும் இருக்கிறோம்; ஜெபத்தில், அன்பில், தினசரி சிந்தையில், ஒவ்வொருவரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

தூரத்தில், நாம் ஒருக்காலும் சந்தித்திராத ஒரு பரிசுத்தவான் இருந்தாலும், தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் இரத்தினமான, ஒரு சகோதரனும் இதுவரை பார்த்திராத அந்த இருதயத்திலிருந்து அன்பின் இனிமையான அலைகள்

அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவிடமும் போகும்,
சரீர ரீதியில் அறிமுகப்படுத்தப்படாத போதும்,
நாம் ஐக்கியத்தின் இலக்கை அடைந்துவிட்டோம்.

எனவே, அன்பானவர்களே, உங்கள் முகத்தைப் பார்க்கத் தவறினாலும், உங்கள் இருதயம் இங்கே இருப்பதை நாங்கள் அறிவோம். உறுதியும், உண்மையையுமுள்ள உங்கள் ஜெபங்களின் வல்லமையை நாங்கள் உணர்கிறோம். இடையில் குறுக்கிடும் பல மைல் தூரமென்பது சரீரத்தைப் பிரித்து வைத்திருக்கலாம், ஆனால், பூமியில் உள்ள யாதொன்றும் கொடுக்க முடியாததொரு நெருக்கம் அதோடு கூட இருக்கிறது.

# 36.சுகந்த வாசனையின் பிரவாகம்

## லூக்கா 7:37,38; மாற்கு 14:3

நமக்கும் மேலே வானத்தில் உன்னதமான, மிக உன்னதமான வெள்ளைக்கல் பரணி ஒன்று உள்ளது,

அது உலகின் மனுகுலத்தின் மீது படிப்படியாக ஊற்றப்படட்டும்.

அதிமிகு தெய்வீக திறனால் உருவாக்கப்பட்ட அது மிக இனிமையான நறுமணம் நிறைந்தது;

அது ஒவ்வொரு பள்ளத்தாக்கையும், உயர்ந்த மலைச் சிகரங்களையும் நிரப்பி மூடிவிடப் போதுமானது.

அந்த காலத்தின் பிரளயத்தை போலல்லாத பிரளயம் ஒன்று விரைவில் வரும், ஆதி காலத்தில் பெரும் மழையின் போது மாம்சமும் ரத்தமும் நிறைந்த வீட்டை மூழ்கடித்தது.

ஆனால் இப்போது வரப்போகும் பெரு வெள்ளம் பூரண சுகந்தமாய்; எங்கும் மணம் பரவி;

சமுத்திரத்திலும், மலைகளின் மேலும், காற்றிலும் ஊடுருவி இருக்கும்.

மேலும் அந்த சுகந்தத்தின் பனிச்சாரல் மனிதர்களின் கண் மற்றும் காதுகளில் சென்று

அந்த நறுமணமிக்க காலங்களால் அவர்களின் சிந்தைகளையும், மனங்களையும் இனிமையாக்கும்.

பாவம் எனும் துர்வாசனையும், அதோடு மரணம், கண்ணீர் போராட்டங்களும் நிரந்தரமாய் ஒழிந்திடும் போது

வாழ்வதற்கு எத்தனை இனிமையான சூழலும், அதோடு ஜீவிதமே எத்தனை மணமுள்ள தாகவும் இருக்கும்?

ஆனால் இந்த ஆனந்தப் பெருவெள்ளம் வானாதி வானங்களில் இருந்து மகிமையால் அருளப்பட வேண்டும் என்று நம் தேவன் ஞானத்தோடு திட்டமிட்டுள்ளார்.

ஆனால், தற்போதுள்ள மிகச் சொற்பமான பண்டக சாலையின் தைலத்திலிருந்து, பலவீனமான ஆனால் ஆர்வமுள்ளவர்களின் முயற்சியால், அனுதின ஆசீர்வாதங்கள் இப்போது பொழிகிறது.

எனவே, ஆறுதல், அமைதி மற்றும் மகிழ்ச்சியை அளிக்கும் நம்முடைய பரிமளதைலத்தை நாமும் தேவ பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஊற்றி– இந்தப் பணியில் நமது வாழ்க்கையைச் செலவழிப்போம்.
இந்த வார்த்தைகளும், செயல்களும் நெகிழ்வான உள்ளத்தை வெளிப்படுத்துகிறபடியால், பாவத்தை ஒழிப்பதில் இயேசுவோடு பங்கெடுத்துக் கொள்ள அதுவே மிகவும் தகுதியுள்ளதாக இருக்கும்.

ஓ! ஆனால் இதன் மகத்தான தொடர்ச்சியை நான் உங்களுக்குச் சொல்லும் போது கவனமாகக் கேளுங்கள். அந்த நாளில் பூமியின் குடிகள் மேல் அற்புதமான இனிமை பொழிந்திடும், ஆனால் அருளப்பட்டவர்களிடமிருந்தே நறுமணம் மேல்நோக்கி எழுவதால், அந்த நறுமணம் பூமியில் யாரிடமிருந்து வழிந்ததோ அவர்களிடமே திரும்பி வரும்.

# 37.என் ஜெபம்

உமது வழிகளை எனக்கு காண்பியும், என் ஆண்டவரே; உமது பாதைகளை எனக்குப் போதியும் உமது சத்தியத்தில் என்னை வழி நடத்தி எனக்குக் கற்றுத் தாரும். உமது இரக்கத்தின்படி, உமது புண்ணியங்களின் நிமித்தம் என்னை நினைவில் வையும், ஓ ஆண்டவரே! என் பலவீனத்தை அதிகம் பராதேயும். என் பலவீனத்தில் உம் பெலன் பரிபூரணமடைவதை நீர் அறிவீர். என் தோல்விகளை அதிகம் பொருட்படுத்தாதேயும்; என்னை உம்மைப் போல் ஆக்கும், அருமை ஆண்டவரே, எப்படியாகிலும், என்ன விலை கொடுப்பதாயினும் பரவாயில்லை, எனக்குப் பிடித்தாலும், இல்லையென்றாலும் என்னை உமது சாயலாக்கும். உமக்கே நன்றாகத் தெரியும், எனக்குள் உம்முடைய சித்தமே நிறைவேற வேண்டும், ஆனால் என் சித்தமல்ல, எப்போதும் உம்முடைய சித்தமே. அந்த வழிமுறையை நான் விரும்பாமலும் போகலாம், அது காயப் படுத்தலாம், ஒருவேளை நான் சோர்வடையக் கூட வாய்ப்புள்ளது, அநேகமாகப் பின் வாங்கிப் போகவும் நான் தயாராக இருக்கலாம். நான் இந்தப் போராட்டத்தால் சோர்ந்து, ஓய்விற்காகப் புலம்பி, வேலை முடிவதற்கு முன் விடுதலைக்காகக் கதறலாம். அதைப் பொருட்படுத்த வேண்டாம், அருமை ஆண்டவரே: உமது நாமத்தின் நிமித்தமும், உமது சொந்த மகிமைக்காகவும், நீர் ஆரம்பித்த இந்தப் பணியை முடித்து விடும்; மட்டுமன்றி உமது ரூபத்தையும், சாயலையும், என்னில் தெளிவாய், உண்மையாய், பூரணமாய் நீர் காணும் வரையிலும் உமது கரத்தை விலக்கி விடாதேயும். என்றைக்கும் உமக்கே, உமக்கு மட்டுமே துதிகள் உண்டாவதாக. ஆமென்.

# 38.நமது அபூரணங்கள்

நாம் பூரணராக இருக்க முயல வேண்டும், ஆனால் எவ்வளவு முயன்றாலும் இவ்வாழ்க்கையில் முழுமையான பூரணத்தை அடைய முடியாது. இப்போது சாத்தியமான ஒரே பரிபூரணம் இருதயத்தின் பரிபூரணம் மட்டுமே, அதாவது பரிபூரண விருப்பங்களும், நோக்கங்களும், ஒரு பரிபூரண சித்தமுமே. (ரோமர் 12:2)

நீங்கள் முழுமையை அடைந்து விட்டதாக நினைத்தால், பரி பூரணத்தைப் பற்றிய உங்களது கருத்து மிகவும் குறைவானதாகவோ அல்லது நீங்கள் அடைந்திருக்கும் நிலையைப் பற்றிய எண்ணம் மிகவும் அதிகப்படியானதாகவோ இருக்கிறது என்று அர்த்தம். இதற்குக் காரணம் முதலாவது அறியாமை, அடுத்தது பெருமை.

ஆனால் நம்முடைய அபூரணங்கள் யாவுமே கூட 'சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்' என்பதில் அடங்கும். (ரோமர் 8:28) நம்முடைய அபூரணங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின் அவசியத்தின் தொடர்ச்சியான நினைவூட்டலாகும். நாம் தவறுகள் ஏதும் செய்யவில்லை என்றால், நமக்குத் தேவையில்லாத ஒரு மூடலை வழங்குவதில் தேவன் ஒரு பெரும் தவறை செய்திருந்திருப்பார். (1 யோவான் 2:1)

பிறருடைய அபூரணங்ளின் மூலமாக நம்முடைய அபூரணம் நமக்கு பொறுமையைத் தருகிறது. நம்மிடம் பலவீனங்கள், கறைகள் இருந்த போதிலும், நம்முடைய கர்த்தர் நம்மிடம் இவ்வளவு பொறுமையாக இருக்கிறார் என்றால், நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் நாமும் பொறுமையுடன் இருப்பதே நியாயம் என எண்ணுகிறோம்.

நமது அபூரணங்கள் நம்மைத் தாழ்மைப்படுத்துகிறது, மற்றும் தாழ்மையுடன் நடப்பதற்கான வாய்ப்பையும் நமக்கு அளிக்கிறது. நமது மனத்தாழ்மையை அளவிடுவதற்கான

நிச்சயமான வழிகளில் ஒன்று, நமது தவறுகளையும், நமது அபூரணங்ளின் பிற ஆதாரங்களையும் ஒப்புக்கொள்ள நாம் தயாராக இருப்பது தான்.

பரிபூரணமானது வரும் காலத்திற்காக நம்மை நம்முடைய அபூரணங்கள் இன்னும் முழுமையான ஊக்கத்தோடு நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கச் செய்கின்றன. (1 பேதுரு 1:13)

நமது அபூரணங்கள், நமது விழிப்புணர்வைப் புதுப்பிக்கவும், வரப்போகும் காலத்தில் இன்னும் கடினமாக முயற்சி செய்யவும் நம்மை ஊக்குவிக்கின்றன; அவை நம்மை ஒருபோதும் சோர்வடையச் செய்யக்கூடாது. ஊக்கமின்மை என்பது நமது இரட்சகரின் புண்ணியத்தின் நிறைவில் நம்பிக்கையின்மையைக் குறிக்கும்; அல்லது தாழ்த்தும் செயல்முறையை வெறுக்கும் பெருமை இருப்பதைக் குறிக்கும்; அல்லது மாம்சத்தின் உண்மையான நிலை மற்றும் அதிலிருந்து எவ்வளவு குறைவான அளவு மட்டுமே எதிர்பார்க்க முடியும் என்பதைக் குறித்த அறியாமையை; அல்லது தெய்வீகக் கிருபையின் வாக்குறுதிகளை நாம் நம்ப வேண்டிய அளவுக்கு நம்பத் தவறியதையே குறிக்கும். (ரோமர் 8:37-39)

நமது அபூரணங்கள் நமது தன்னம்பிக்கையை அழித்து, கர்த்தர் மீதான நமது நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றன. (பிலிப்பியர் 3:3; சங்கீதம் 56:3)

நமது அபூரணங்கள் நம்மை இன்னும் முழுமையாகச் சோதிக்கின்றன. சிலர் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும், தங்கள் குறைபாடுகளைப் புறக்கணிக்கிறார்கள்; மற்றவர்கள் மனமுடைந்து, கை விட்டு விடுகிறார்கள். இரண்டு கடைக்கோடி எல்லைகளுக்குமே சென்று விடாதவர்களையே கர்த்தர் தேடுகிறார். (ஏசாயா 30:21; நீதிமொழிகள் 4:26,27)

சரியான திசையில் நம்மை மென் மேலும் வளர்க்க நமது அபூரணங்கள், நாம் செய்வதற்கு ஒரு வேலையையும், போராட ஒரு யுத்தத்தையும் நமக்கு அளிக்கின்றன.

# 39.நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்

நீங்கள் சிந்திக்கும் போது, பேசும் போது, படிக்கும் போது, எழுதும் போது, நீங்கள் பாடும் போது, நடக்கும் போது, மகிழ்ச்சியைத் தேடும் போதும், வீட்டிலும் வெளியிலும் உள்ள எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட, எப்போதும் 'கர்த்தருடைய பார்வையின் கீழேயே' வாழுங்கள்.
மகிழ்ச்சியிலும், துயரத்திலும் நீங்கள் எதை நினைத்தாலும், இயேசு அறிய விரும்பாத எதையும் நினைக்காதீர்கள்.

நீங்கள் முணுமுணுப்பாகவோ, தெளிவாகவோ என்ன சொன்னாலும், இயேசு கேட்க விரும்பாத எதையும் சொல்லாதீர்கள். வசீகரமான பக்கத்தில் நீங்கள் எதைப் படித்தாலும், உங்களுக்கு முற்றிலும் உறுதியாகத் தெரியாத எதையும் படிக்காதீர்கள், தேவன், 'அந்தப் புத்தகத்தை எனக்குக் காட்டு!' என்று வலியுறுத்தினால், சட்டென உன் முகத்தில் ஒரு திகில் தெரியும். நீங்கள் அவசரத்திலோ, கவனத்துடனோ எதைஎழுதினாலும், இயேசு படிக்க விரும்பாத எதையும் எழுதாதீர்கள்.

உங்கள் மகிழ்ச்சியின் நடுவில் நீங்கள் என்ன பாடினாலும், தேவனின் காதுக்கு அதிருப்தியான எதையும் பாடாதீர்கள்.
எங்கு சென்றாலும், நீங்கள் பயப்படக்கூடிய இடத்திற்கு ஒருபோதும் செல்லாதீர்கள் "நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்ற தேவனின் கேள்வி உங்களிடம் கேட்கப்படும்.
இளமையின் உற்சாகத்திற்காகவோ அல்லது வயோதிகரின் ஆறுதலுக்காகவோ. நீங்கள் ஈடுபடும் பொழுது போக்கு எதுவானாலும், தேவன் மேலிருந்து பார்த்து, 'நீ என்ன செய்கிறாய்?' என்று கேட்கும் விதத்தில் இருக்குமேயானால், அந்த மகிழ்ச்சியிலிருந்து விலகி விடு.

# 40.பரலோகத்தின் முன் அறை

பரத்தின் காரியங்களில் இப்போது என் சிந்தை வாசமாய்
இருக்கிறது, பரலோகத்தைப் போன்ற அன்பால் என் இருதயம்
இப்போது நிறைந்திருக்கிறது, தெய்வீக ஆனந்தத்தை என்
எழுதுகோல் இப்போது எடுத்துரைக்கிறது,
ஏனெனில் நான் பரலோகத்தின் முன் அறையில் இருக்கிறேன்.

நான் பரலோகத்தின் முன் அறையில் இருக்கிறேன் என்பதை
நிரூபிக்க உதவும் பரத்தில் இருப்பது போன்ற ஒரு ஐக்கியம்
மிகத் தூய்மையான, மிக இனிமையான கிருபையோடும்,
அன்போடும் இப்போதே என்னுடையதாக இருந்து,

வரப்போகும் எனது வீடான பரலோகத்தின் ஒளி
ஏற்கனவே என் இருதயத்தில் ஒளிர்கிறது
நான் பரலோகத்தின் முன் அறைக்குள் வந்து விட்டேன் என்பதை
இது நினைவூட்டுகிறது.

அந்த மகிமையான இடத்தின் இசை
இப்போதே உலகின் இரைச்சலை மாற்றியமைத்து
அதின் கிருபையின் ஸ்வரங்களால் நான் பரலோகத்தின் முன்
அறையில் இருக்கின்றேன் என்று எனக்குச் சொல்லுகிறது.

ஓ! அனைத்தையும் அவருக்கே அர்ப்பணித்து விட்டபடியால்
என்னுடைய தற்போதைய நிலை எவ்வளவு விலையேறப் பெற்றது
பரலோகத்தின் முன் அறைக்குள் நுழைந்ததிலிருந்து
அவருடைய அன்பு, அக்கறை யாவுமே மிக உன்னதமானவைகள்

ஆனால் ஆஹா! இது அந்த உன்னதமான ஸ்தலத்தின்
சுவைக்கான ஒரு கண நேர கண்ணோட்டமே என்றால்
பரலோகத்தின் முன் அறைக்கு அப்பால் சென்றுவிட்டால்

இன்னும் எவைகளை எல்லாம் நாம் எதிர்பார்க்கலாம்,
என்னே ஒரு கிருபையின் ஆசீர்வாதம்.

எனவே, நமது வைராக்கியத்தைப் புதுப்பித்துக்கொள்வோம், இலக்கை நோக்கி நமது ஓட்டத்தைத் தொடர்வோம், நமது அனைத்து சோதனைகளும் பரலோகத்தின் முன் அறையை கடக்க உதவும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

# 41.இரக்கம்

என் இருதயத்தின் உணர்வுகளைப் பேச, என் நாக்கு கட்டப்பட்டுள்ளது, என் வார்த்தைகள் மிகவும் பலவீனமாக உள்ளன. அன்பர்களே, என் ஆத்துமா உங்கள் துக்கத்தில் கலந்து, நிம்மதி அளிக்கும் வார்த்தைகளுக்காக ஏங்குகிறது.

அந்த பாரம் மிகவும் பெரிதாகத் தோன்றுவதை  நான் அறிவேன், சிலுவை மிக கடினமாகவும், சாலை மிகவும் குறுகலாகவும் உள்ளது. நீங்கள் இப்போது கடந்து வந்த அனுபவங்களை நான் அறிவேன், ஆனால் நீங்கள் உணர்வதை முழுமையாய் என்னால் உணர முடியாது.

நான் மிகவும் இரக்கம் பாராட்ட விரும்புகிறேன், ஆனால் என் வார்த்தைகள் அதை ஒரு போதும் அணுக முடியாதென அஞ்சுகிறேன் அந்த ஐக்கியமும் அன்பின் பிணைப்பும், பரத்தில் இருந்து வந்த தைலத்தைப் போல் ஆறுதல் அளிக்கின்றன.

ஆயினும், ஒவ்வொரு செங்கடலிலும் ஒரு வழியை உருவாக்கவும் கெத்செமனேயை சகித்துக்கொள்ளவும். தேவையான அனைத்து வலிமையும் எங்கிருந்து வருகிறதென்ற மூலாதாரத்தை நான் உங்களுக்குக் காட்டுவேன்.

வேதனையை ஏளனப்படுத்துமாறு அவர் நமக்குச் சொல்லவில்லை; அல்லது அது மீண்டும் வரட்டும் என நம்மை விரும்பச் சொல்லவுமில்லை. நாம் எந்த இழப்பையும் அனுபவிக்கவோ, அல்லது சிலுவையின் துக்கங்களை ஏளனப்படுத்தவோ அவர் விடமாட்டார்.

ஆனால், ஒரு காலத்தில் நாம் அவருக்கென கொண்டிருந்த அன்பை நம் இதயத்தில் இருந்து அவர் இழந்துவிடக் கூடாது என்பதை மட்டுமே  அவர் கேட்கிறார்-ஏனென்றால் அது மிகவும் துக்ககரமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம்.

ஓ, நம் அன்புக்குரியவர்கள் மண்ணில் கிடத்தப்பட்டிருந்தாலும், உயிர்த்தெழும் வரையில் சில காலம் மட்டுமே அவர்கள் அங்கே உறங்குகிறார்கள் அப்போது நாம் புன்னகை செய்வோம் என்பதை நம்பும்படியான விசுவாசத்தை நாம் பெற்றிருப்போமாக.

ஓ, அவர்களின் மரணமும், கொடூர வேதனையும் தான்
உங்களை அந்த மேலான நிலை வரை செல்ல உதவியது என்பதை
நீங்கள் அவர்களுக்கு வெளிப்படுத்தும் போது
அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்கள்.

அப்போது அவர்கள் அனுபவித்த ஒவ்வொரு வலியையும் பெரிதாக மதிப்பார்கள் அவர்கள் சகித்த வலிகள் யாவும் அவர்களை சந்தோஷப்படுத்தும், ஏனெனில், அந்த வலியை உண்டாக்கிய முட்களே–பூமியின் ஆசாரியர்களையும், ராஜாக்களையும் பூரணப்படுத்தியுள்ளதை அவர்கள் காண்பார்கள்.

இவ்வாறு, பூமியை மனிதனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட வீடாகவும்,
மனிதனை அதன் ஆட்சியாளராகவும் மாறுவதற்கான
ஆயத்தம் செய்பவர்களைப் பொருத்துவதில்
அவர்களும் மறைமுகமாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

# 42.அவர் அறிவார் நானும் அறிவேன்

என் நேசத்திற்குரிய விருப்பத்தை நிறைவேற்ற
நான் பலமுறை திட்டமிட்டு, நம்பிக்கையோடு இருந்தேன்;
என்னை விட அதிகம் அறிந்தும் அவர்,
என் வானிலிருந்து நம்பிக்கை நட்சத்திரத்தைப் பறித்துவிட்டார்.
ஆனால் அவர் என் திட்டங்களை எப்போது வெறுமையாக்கினாலும்
அவரது காரணங்கள் ஞானமானவை என்று நான் நன்கு
அறிந்திருக்கிறேன்,மிக சிறந்த வழி எது, தீமையை உண்டாக்குவது
எது என நான் ஊகிக்கிறேன் அவர் மட்டுமே உறுதியாக
எல்லாமும் அறிவார்.

சமாதானத்திற்கான ஆசைகளைத் திருப்திப்படுத்த,
சில நேரங்களில் நிம்மதிக்காக என் ஆன்மா பெருமூச்சு விடும்;
ஆனால் என்னை விட அதிகம் அறிந்த அவர்
இந்த ஏக்கங்களைக் கூட சிலுவையில் அறைவார்.
ஆனால், அவருடைய காரணம் சரியானது என்பதை
நான் நன்கு அறிவேன். அவைகள் எனது சிலுவையின் பாரத்தைக்
கூட்டுகிறது  அவர் என் பாரத்தை இலகுவாக்கி இருக்க முடியும்,
அது எனக்கு இழப்பாக இல்லாவிட்டால், அவர் செய்திருப்பார்.

கழுகுகள் இரையைத் தேடிப் பறப்பது போல்
பரிசுத்தவான்கள் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள்
ஆனால் என்னை விட அதிகம் அறிந்த அவர்,
நான் பறக்க முடியாதபடி என்னைக் கூண்டில் அடைத்து
வைத்துள்ளார். ஆயினும் அப்படியானதொரு விருந்துக்கான
கதவை அவர் பூட்டுகிறார் எனில்; நான் எனக்குச் சிறந்தது
என்ன என எண்ணிக் கொண்டிருக்கும் போது,
அவர் மிகச் சிறந்ததை எனக்காகக் கட்டளையிடுகிறார்.

ஆனால் ஆவியில் அழகுள்ள வார்த்தைகளை
அருகிலுள்ள ஒரு யாத்ரீக பிரசங்கியார் பேசுகிறார்,
ஆனால் என்னை விட அதிகம் அறிந்த அவர்
என்னை நோயின் படுக்கையில் விட்டுவிட்டார்.
அவரது காரணங்களின் சிறப்பை நான் மிக நன்கு அறிவேன்
அது ஆரோக்கியத்தை அடைத்து விட்டு அது வலியை
அனுமதிக்கிறது. ஏனெனில் அதிக ஆதாயமான ஒன்றையே அவர்
அனுமதிக்கிறார் என்பதால், இந்தப் புரிதல் எனக்கு
மகிழ்ச்சியையும், அமைதியையும் தருகிறது.

உன்னதத்தில் இருக்கும் இராஜாவின் துதிகளை
உரக்கப் பாட என் இருதயம் ஏங்குகிறது
அவர் என்னை விட அதிகம் அறிந்தவரானபடியால்
இதைக் கூட எனக்கு மறுக்கக் கூடும்,
அது அந்த சந்தோஷத்தையும் கூட சிதறடித்தாலும்,
அவரது காரணங்கள் மகத்தானவை என்பதை மிகச் சரியாக
நான் அறிவேன். நம்பிக்கையும் அன்பும் போராடுவதை விடப்
போராட்டத்தை அமைதியாகப் பார்க்கவும், நிற்கவும் அது எனக்கு
உதவுகிறது.

என்னை விட அதிகம் அறிந்தவருக்காக,
யாருடைய கிருபையின்மீது நான் சார்ந்திருக்க முடியுமோ–
அவருக்காக அனைத்துப் பயங்களையும் விலக்கி, சுயத்தைப்
பலியாக்கி– பின்பு என் இருதயத்தைப் பரிசுத்தமாக்குகிறேன்;
ஆம், அவருடைய காரணங்கள் யாவும் தெய்வீக அன்பின்
வார்த்தையோடு பிணைக்கப்பட்டிருப்பதை நான் நன்கு
அறிவேன்–ஏனெனில் நான் முன்னால் ஒரு அடி தூரத்தை
மட்டுமே பார்க்கிறேன் என் ஆண்டவரோ அந்தப் பாதையின்
முடிவை அறிந்திருக்கிறார்.

BIBLE STUDENTS
Food for New Creature